# The Life History of The Late Rev. T. P. HUNT

காலஞ்சென்ற

## கனம் T. P. ஹன்ற் போதகர் அவர்களின்

சீவிய சரித்திரச்சுருக்கம்

"கிழக்கில் ஒரு நட்சத்திரம் உதித்தது"

BY

E. K. YESUTHASON
Chavakachcheri

October 20, 1941

விலை சதம் 10

# The Life History of
# The Late
# Rev. T. P. HUNT

காலஞ்சென்ற

## கனம் T. P. ஹன்ற் போதகர்

அவர்களின்

சீவிய சரித்திரச்சுருக்கம்

" கிழக்கில் ஒரு நட்சத்திரம் உதித்தது "

BY


E. K. YESUTHASON

Chavakachcheri



October 20, 1941


விலை சதம் 10

சாவகச்சேரி
இலங்காபிமானி அச்சியந்திரசாலை

கனம் ஹன்ற்
போதகர் அவர்கள்
ஓர் சுதேசபோதகரா
யிருந்தாலும் வேலை
யிலும் சீவியத்திலும்
செல்வாக்கிலும், அறிவாதியாம் சகலகாரியங்
களிலும் அவர் ஓர் மிஷனரியின் இடத்தை எடுத்
திருந்ததினால் அவரை ஓர் சுதேச போதகரென்
றல்ல, மிஷனரியாய் மதித்து, இலங்கை அமெ
ரிக்கன்மிஷனரிமார் யாழ்ப்பாணக்குடாநாட்டில்
கால்வைத்த 1816-ம்ஆண்டு ஆடிமாதம் 11-ந்
திகதியை முன்னிட்டு
கணிக்கப்படும் **125**-ம்
வருட யூபிலி கொண்
டாடவிருக்கும்
1941-ம் ஆண்டு ஐப்
பசிமாதம்20-ம்திகதி
தினத்தில் இத்தேசத்
தில், தேவனுடைய
இராச்சிய ஊழியத்
தில் சம்பந்தப்பட்டு
உழைத்தவராளமான
பிறதேசமிஷனரிமார்,
சுதேச ஊழியர்களில் மறைந்து
போனவர்கள், இப்போதும் உழைத்து
வருகிறவர்கள் முதலிய எல்லா ஊழியர்பேரிலும்
இதைப் பணிவுடன் சமர்ப்பிக்கின்றேன்.

# முன்னுரை

யாழ்ப்பாணக் கல்லூரியின் ஆசிரியரிலொருவரும் தற்போது தென்னிந்தியாவிலுள்ள அண்ணமலைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் தமிழ்ப்பாஷை கற்றுவருபவருமான ஸ்ரீமான் K. மதியாபரணம் B. A. அவர்கள் சிநேகமுறையில் என்னைச் சந்திக்க (7-6-41-ல்) வந்தபோது நமது இல்லத்திலிருந்து, முற்காலப் போதகர்மாரின் சீவியவிஷயங்களையொட்டிச் சம்பாஷித்தவேளையில், சாவகச்சேரியில் நாற்பதுவருடகாலம் ஊழியஞ்செய்து சீவித்துப்போன கனம் ஹன்ற் போதகர் அவர்களின் குணவிசேஷங்களைப்பற்றியும் பேசிக்கொண்டோம். அவ்வேளையில் ஸ்ரீமான் மதியாபரணம் அவர்கள், "இப்போ எங்கள் மிஷனில் முதிய போதகர்மாராய் இருக்கும் உங்களைப்போன்ற ஆட்கள் இன்னும் கொஞ்சகாலத்திற்குள் பிரிந்துபோனல் முற்காலங்களில் சீவித்த இப்படியான நல்லூழியரின் குணவிசேஷங்களை எடுத்துக்கூற ஆட்கள் இல்லாமையால் அவர்கள் சீவியத்தில் விளங்கிய மேன்மையான குணசீலங்கள் அவர்கள் எலும்புகளோடும் நிணங்களோடும் அடக்கம் பண்ணப்பட்டதுபோல் ஆகும். ஆகையால் உங்கள் சீவியத்தின் வேலையில் ஒன்ருய்க்கண்டு, இங்கிருந்த கனம் ஹன்ற் போதகர் அவர்களின் சீவிய சரித்திரத்தை சுருக்கமுறையில் வெளியிடுங்கள்" என்று என்னைக் கேட்டுக்கொண்டார்.

அவர் போனபின், அவரால் கற்பிக்கப்பட்ட வேலையைப்பற்றிய எண்ணம் என் மனதை நிரப்பியது. இப்படியான ஒரு வேலையைச் செய்ய வேண்டுமானால் இப்பொ அக்கடமை எனக்கே உரியதென எண்ணினேன். கனம் ஹென்ற் போதகர் அவர்களின் போதக விசாரணைக்குள்ளான உசன் கிராமத்தில் பிறந்து, ஆகாரபாடசாலையில் பலமுறை அவரின் போதனைகளைக்கேட்டு, கிறீஸ்த விசுவாசியாகி அவரால் ஞானஸ்நானம்பெற்று, அவர் ஊழியஞ்செய்த சபையில் அங்கத்துவம் வகித்து, பத்துவருடகாலம் அவருடன் நெருங்கிப் பழகி, பிந்தியகாலத்தில் நான் ஓர் உபாத்தியாயிருந்தாலும் கிறீஸ்த ஊழியத்தில் அவர் உடனூழியனய்ச் சுவிசேஷவேலைசெய்து, இப்போ அவர் ஊழியம் புரிந்த இடங்களின் ஊழியப்பொறுப்பில் இருக்கும் நானே இதைச் செய்யவேண்டுமெனத் தீர்மானித்தேன்.

அவர் சீவிய சரித்திரத்தை எழுதவேண்டிய ஏதுக்களைத் தேடியபொழுது, அவர்காலத்தில் சீவித்த பலரும் பிரிந்துபோனதால் கண்சாட்சியான சாட்சி கிடைக்கவில்லை. சீவனோடிருப்பவர்களும் தகுந்த குறிப்புத்தர இயன்றவர்களாய் இருக்கவில்லை. பழைய குறிப்புப் புஸ்தகங்களில் விஷயங்களைத் தேடியபோதும் அதிகம் கிட்டவில்லை. கவனமாய்க் காக்கப்படும் சபைப்புத்தகங்களில் பொதுவான சபை வர்த்தமானங்களும் விருத்தாந்தங்களுமே காணப்பட்டன. அவர்

தமது சீவிய சரித்திரத்தை எழுதி வைத்துப் போன புஸ்தகம் அழிந்துபோனது. இவைகள் யான் எத்தனித்த வேலைக்குத் தைரியவீனமாய் இருந்தன. ஆனாலும் அவர் சீவியசரித்திரத்திலும் அவரில் விளங்கிய குணசீலத்தொகுப்பே விசேஷம். அவைகளை ஒருமுகப்படுத்தி, பாலைவனத்தில் சிதறுண்டிருக்கும் அழகிய புஷ்பங்களைச் சேர்த்து ஒரே மாலையாய்க் கட்டும்முறையை மனதிற் பாவித்து, அம்முறையில் இப்புஸ்தகத்தை எழுத எண்ணினேன்.

மேலும், இதைச் சாதாரண சனங்களுக்காகவாவது கிறீஸ்தசபையின் அங்கத்தவர்கட்காகவாவது எழுதாமல் என்னைப்போல் கிறீஸ்தசபையின் ஊழியப்பொறுப்பேற்று உழைக்கும் உடனூழியர்கட்கே பயன்படும்முறையில் எழுத விரும்பினேன்.

இலக்குவைத்த மாங்காய்க்கு எறிந்தவனின் கல்லு வேறுமாங்காய்களிலும்பட்டு, அவைகளையும் இலக்குக்கொண்டகாயையும் விழுத்தினால் எறிந்தவனின் மனம் மகிழ்வதுபோல், இச்சிறு புஸ்தகம் ஏனைய சனங்களாலும் வாசிக்கப்பட்டு பயன் விளைக்குமானால் அது இரட்டிப்பான நன்மையே. இலக்குப்பொருள் சபை ஊழியரென்பது என் கருத்து. இதில் வெளிப்படும் குறிப்புகளில் பல நான் கண்ணாரக் கண்டவைகளும், அவர் சொல்லக் கேட்டவைகளும், சில நம்பப்படும் ஆட்கள் சொல்லக்கேட்டவைகளுமே.


சூரியனின்நிறம் வெயிலில் அல்ல, மழை மேகங்கட்கூடாக வானவில்லிற்தோற்றும். அதின் மகிமை விம்பித்த மேகங்கட்கல்ல, சூரியனுக்கே உள்ளதுபோல, இப்புத்தகத்தில்வரும் நற்குறிப்புகளை எந்தமனிதனின் மகிமை நோக்கியுமல்ல, இப்போதகரை ஆட்கொண்டு நடத்திய கடவுளுக்கே உண்டாகவேண்டுமென்பது எனது பிரார்த்தனை.

சாவகச்சேரி,
25-7-41.

E. K. யேசுதாசன்

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | குடும்ப வரலாறு ... ... | 1 |
| 2. | கல்விமுறை ... ... ... | 2 |
| 3. | ஆசிரியத்தொழிலும் குணப்படுதலும் | 3 |
| 4. | சுவிசேஷஊழியப்பிரவேசம் ... | 4 |
| 5. | இவர் ஒரு ஞானவான் ... ... | 6 |
| 6. | பொறுமைசாலி ... ... | 8 |
| 7. | முகமலர்ச்சியுடையவர், பரோபகாரி | 11 |
| 8. | கிரமமுடையவர் ... ... | 12 |
| 9. | சாதாரணசீவியமுள்ளவர் ... | 14 |
| 10. | கிறீஸ்தசீவியம் ... ... | 16 |
| 11. | செபசீவியம் ... ... ... | 17 |
| 12. | அறிவாராய்ச்சி ... ... | 19 |
| 13. | சபைஊழியம் ... ... ... | 22 |
| 14. | குடும்பசங்கிப்பு, அன்பின் விசாரணை | 24 |
| 15. | சுவிசேஷவேலை ... ... | 26 |
| 16. | சனசங்கஊழியம் ... ... | 32 |
| 17. | கிழக்குநாட்டில் அவர்செய்த ஊழியம் | 33 |
| 18. | கிழக்குநாட்டு சனசங்கசேவை ... | 35 |
| 19. | பஞ்சமசாதியாரும் ஆங்கிலப்படிக்க ஏற்பாடுசெய்தல் ... ... | 37 |
| 20. | சாதிக்கட்டையழித்தல் ... | 39 |
| 21. | பொதுசனஸ்தாபனங்கள் ... | 41 |
| 22. | வியாபார சமுதாயம், கிறீஸ்த சம்ரட்சணை சங்கம், யாழ்ப்பாண சுதேச சுவிசேஷ சங்கம் ... ... ... | 43 |
| 23. | மதுவிலக்கு ஊழியம் ... ... | 44 |
| 24. | தொடர்ந்தேர்ச்சி, மரணத்துக்குரிய ஆயத்தம் ... ... ... | 47 |
| 25. | தேகவியோகம், அடக்கஆராதனை | 49 |
| 26. | ஞாபகஆராதனை, முடிவுரை ... | 50 |



காலஞ்சென்ற

# கனம் T. P. ஹன்ற் போதகர்

அவர்களின்

## ஜீவிய சரித்திரச்சுருக்கம்

### குடும்ப வரலாறு

இற்றைக்கு நூறுவருடங்களுக்குமுன்னுனகாலத்தில் இலங்கைத்தீவின் வடபாகத்தையடுத்த யாழ்ப்பாணக் குடாநாட்டின் தென்கரையிலுள்ள தென்மராட்சிப் பகுதியிலிருக்கும் சாவகச்சேரி கோவிற்பற்றின் ஓர் கிராமமாய்விளங்கும் பெரியமாவடியில் ஓர் இந்துசமயகுடும்பம் இருந்தது. அக்குடும்பத்தலைவன், பட்டணத்து முருகப்பா என்ற பெயரால் அழைக்கப்பட்டார்.

அக்குடும்பத்தில் ஆறு ஆண்மக்கள் பிறந்தனர். கடைசிமகனுக்கு சதாசிவம் என்றுபெயர். இவரின்பிறப்பு உத்தேசம் 1831ம் ஆண்டுவரையில் இருக்கும். இக்குடும்பத்தின்பிதா தன் பிள்ளைகள் கல்விப்பயிற்சி உள்ளவர்களாயிருக்கவேண்டுமென்னும் வாஞ்சைகொண்டவர். கல்விமுறை அக்காலத்தில் புஸ்தகமூலமல்ல, எட்டுப்பிரதியாகவே நடைபெற்றது. முருகப்பா பிள்ளைகளின் கல்விப்பயிற்சியின் வாஞ்சையினுலும் பொருள் கஷ்டத்தினுலும் நெருக்கப்பட்டு, தான் அணிந்

திருந்த கடுக்கனைக் கழற்றிவிற்று ஓர் பாரத ஏடு வாங்கி பிள்ளைகள் படிப்பதற்காகக் கொடுத்தார்.

## கல்விமுறை

அக்காலத்தில், தற்காலமுறையான படிப்பு வகைகளும் பாடசாலை ஏற்பாடுகளும் இருந்ததில்லை. 'திண்ணைப்பள்ளிக்கூடம்' என்றழைக்கப்பட்ட பாடசாலைகள் குடியிருக்கும் வீடுகளில் அமைக்கப்பட்டன. அவ்வகையான ஒரு திண்ணைப் பள்ளிக்கூடம் குறிக்கப்பட்ட குடும்பத்திலும் இருந்தது. அதனால் அப்பிள்ளைகள் ஆறு பேரும் படிப்பதற்கு நல்வசதி இருந்தது. பிள்ளைகளின் விவேக விருத்தியினாலும் பிதாவின் கவனத்தினாலும் அவர்கள் படித்து நால்வரும் அக்காலம் திண்ணைப்பள்ளிக்கூடங்களுக்குரிய உபாத்திமாராய் வெளிப்பட்டனர். நால்வரில் ஒருவரான வைரமுத்து (சன்னாசிச் சட்டம்பியார்) தான் இளையமகனான சதாசிவத்திற்குக் கற்றுக்கொடுத்தார்.

திண்ணைப்பாடசாலைப் படிப்பு முடிந்தபின் கிழைத்தேசங்களிலே ஆங்கிலபாஷைக் கழகங்களில் பூர்வமானதாய்க் குறிக்கப்படும்சாஸ்திரசாலை வட்டுக்கோட்டையில் 1823-ம்வருடம் ஸ்தாபிக்கப்பட்டபின், குறித்த இளையமகனாகிய சதாசிவம் அங்கு படிக்க அனுப்பப்பட்டார். விவேகவிருத்தியினாலும் கரிசனையான படிப்பினாலும் தமிழ்ப் பாஷையில் உண்டான நூல்களையும், இந்துசமய

வேதாந்த சித்தாந்த சாத்திரங்களையும், புராண காவியங்களையும், திண்ணைப்பாடசாலையில் கற்றுக் கொண்டார். வட்டுக்கோட்டை சாஸ்திரசாலையில் சேர்ந்து அங்கு ஆங்கிலப்பாஷையையும் அதில் உற்பத்தியான மேலைத்தேச கலைகள் சாஸ்திரங் களையும் கற்று, இருபாஷை அறிவிலும் இருதேசக் கல்விமுறையிலும் தேர்ந்துவந்தார்.

பாடசாலை விடுமுறை காலங்களில் வீட் டிற்கு வரும்போது தான் கற்ற கல்வியைச் செய லில் கொண்டுவரமுயன்று, அடையுண்டு காற்று வெளிச்சம் தடைப்பட்டிருந்த அறைகட்கு யன் னல்கள் அமைத்து சுகாதாரமுறையில் வீடுகளை ஒழுங்குப்படுத்தினர். வீட்டிலிருந்த தனது கல்வி அறையை நன்முறையில் வைத்திருந்தார்.

## ஆசிரியத்தொழிலும் குணப்படுதலும்

சாஸ்திரசாலையில் படிப்புமுடிந்தபின் அங்கு அக் கலாசாலையில் ஒரு உபாத்தியாக நியமிக்கப் பட்டு ஆசிரியத்தொழில்புரிந்துவந்தார்.

சாஸ்திரசாலையில் படிக்கும்போது கிறிஸ்து மார்க்க சத்தியங்களைக் கேட்டு விசுவாசித்து கிறிஸ் துவைத் தன் இரட்சகராக ஏற்றுக்கொண்டு தொமஸ் பீற்றர் ஹன்ற் ( Thomas Peter Hunt ) என்ற பெயருடன் ஞானஸ்நானம் பெற் ருர்.

## சுவிசேஷ ஊழியப்பிரவேசம்

அக்காலத்தில் ஆங்கிலபாஷைப் பயிற்சிபெற்றோர் மிக அரிதாய் இருந்ததினால், அக்கால அரசினர்க்கு இராசாங்ககடமைகளில் ஈடுபட்டுழைக்க ஆங்கிலபாஷைதெரிந்தோர் வேண்டியவர்களாய் இருந்தனர். அப்பாஷையில் சொற்பஅறிவு உள்ளோரும் உயர்தர உத்தியோகங்களில் ஈடுபட்டு அதிக சம்பளமும் நன்குமதிப்பும் பெற்றுச்சீவித்தனர். இவர் ஆங்கிலப்பாஷையில் அதிகம் கற்றிருந்தபடியால் இவருக்கு உயர்ந்த உத்தியோகத்தைக் கொடுக்க அரசாட்சியார் விரும்பி அழைத்தனர். அதேகாலத்தில் இன்னோர்பக்கமாய் சுவிசேஷஊழியத்தைக் கொண்டு செல்ல மிஷனரிமாருக்கு உதவிஊழியர் வேண்டியிருந்தனர். சொற்ப அறிவுள்ளவர்களும் குறைந்த சம்பளத்துடன் இவ்வேலையில் ஏற்பட்டனர். இவ்வேலை அக்காலத்தில் அதி சாதாரணமாயிருந்தபடியால், "ஒருவேலையும் இல்லாவிட்டால் உபதேசிவேலையும் இல்லையோ?" என்பது சாதாரண பழமொழியாய் வழங்கப்பட்டது. இவருக்கு ஒருபக்கமாய் அரசாங்கவேலையும் இன்னொருபக்கமாய் சுவிசேஷவேலையும் இருந்தபோது, பூர்வீகத்தில் மோசே ஒருபக்கத்தில் எகிப்தின் சிங்காசனமும் மறுபக்கத்தில் உபத்திரவப்படும் சனங்களும் இருக்கக்கண்டு, துன்பப்பட்ட சனங்களோடு சேர்ந்துகொண்டதுபோல இவரும் உலகப்பிர

காரம் உயர்பதவிக்குரிய இராசாங்கத்தின் உத்தியோகத்தை விரும்பாமல், சுவிசேஷவேலையைத் தெரிந்துகொண்டார். சுவிசேஷ ஊழியக்காரனுகி 1855-ம் ஆண்டு சாவகச்சேரிச்சபைக்குக் குருவாக அபிஷேகம்பண்ணப்பட்டார். அப்போ சபைக்கு வயசு 21;* அவருக்கு வயசு 24. இலங்கை அமெரிக்கன் மிஷனில் சுதேசக் குருமாராக அபிஷேகம் பெற்றவர்களில் இவர் இரண்டாம் ஆள். இவருக்குமுன் கொர்னேலியஸ் என்னும் ஒருவர் அபிஷேகம் பெற்ருர். (ஆனல் அவர் முழுவதும் யாழ்ப்பாணியல்ல.) 17 வருடகாலம் சாவகச்சேரிச் சபைக்கு குருவாகஇருந்து கடமைபார்த்துத் திரும்பவும் 1872-ம்வருஷம் வட்டுக்கோட்டைச் சாஸ்திரசாலைக்கு உபாத்தியாய் அழைக்கப்பட்டு, 1880-ம் வருடம்வரைக்கும் உபாத்தியாய் இருந்தார். திரும்பவும் அதேவருஷம் சாவகச்சேரிச் சபைக்குக் குருவாகவந்து தம் சீவியபரியந்தம் அதாவது 1903-ம் வருஷம்வரைக்கும் சபையின் மேய்ப்பனுய் இருந்தார். இவ்வூழியத்தை இவர் செய்த காலம் 40 வருடம். இவரின் வேலை விசேஷங்களைக் குறிக்குமுன் இயல்பாய் அமைந்திருந்த சிலகுணவிசேடங்களைக்குறிப்பிட விரும்புகிறேன்.

* சாவகச்சேரிச்சபை ஸ்தாபிக்கப்பட்டகாலம்: 1834

## இவர் ஒரு ஞானவான்

இப்போதகர் அவர்கள் ஓர் அறிவாளி என்பதை முன்னே கவனித்தோம். அத்துடன் ஒரு ஞானவானுமிருந்தார். மற்றவர்கள் கேட்கும் வினாக்கட்கு பொருத்தமாயும் இணக்கமாயும் சமயோசித விடைபகரும் ஞானம் இவருக்கிருந்தது. ஆலோசனை கேட்பவர்கள் சந்தோஷத்தோடும் தர்க்கவாதஞ்செய்து விருதுபெற விரும்புவோர் வெட்கத்தோடும் திரும்பத் தக்கமறுமொழிகளைக் கொடுப்பார்.

ஒருமுறை ஒரு சுவிசேஷப் பகிரங்கக்கூட்ட முடிவில் விளக்கக்கேள்விகள் கேட்கக் கொடுக்கப் பட்ட நேரத்தில், போதகரை வெட்கப்படுத்தும் முறையில் ஓர் இந்துசமய உபாத்தியாயர் குதர்க்கத்துக்குரிய பல கேள்விகளைக் கேட்டார். இக்கேள்வி கேட்கத்துணிந்தவர் ஒழுக்கவிஷயத்தில் ஒழுங்கற்றவர் என்பது ஊரவர்களும் அறிந்த விஷயம். ஆண்டவர் ஒருமுறை கேட்டபடி, போதகர் இக்கேள்விக்கு மறுமொழி சொல்ல முன், 'உம்மை ஒரு கேள்வி கேட்கிறேன், அதற்கு நீர் மறுமொழி சொன்னால் இதற்கு நானும் மறுமொழிசொல்வேன்' என்றுசொல்லி, "எங்கள்தேசத்தில் தற்போது வளர்ந்த பெண்கள் படிக்கும்படி விடுதிப் பெண்பாடசாலைகளை மிஷனரிமார் அமைத்து நடத்துகிறார்களே, அப்பாடசாலை ஒன்றில் உம்மைத் தலைமை உபாத்தியாய

ராக வைப்பார்களா?" என்று கேட்டபோது வெட்கத்தோடே நிலத்தையேநோக்கினவராய்ப் போய்விட்டார். இன்னும் பல சம்பவங்கள் இது போல் உண்டு. அவைகளை வெளிவிடுவது அழகல்லவென்று நிறுத்தினேன்.

ஞானமாய்ப்பேசும் விஷயம் மாத்திரமல்ல, ஞானமாய் நோக்கும் விஷயமும் அவரிடமுண்டு. காலங்களையும் காரியங்களையும் கணித்து யூகித்து அனேகவருடங்கட்குப் பின்வரும் காரியங்களை சமீபத்தில் நடப்பனபோலவும் நடந்தேறினபோலவும் வெளிப்படுத்துவார்.

1898-ம் ஆண்டு சித்திரை மாதம் 20-ம் திகதி ஸ்பானியா—அமெரிக்கா என்னும் தேசங்களுக்கிடையில் யுத்தம் தொடங்குவதற்குமுன், யாழ்ப்பாணத்தில் பலகாலம் சுவிசேஷவேலைசெய்து அமெரிக்காவுக்குப் போயிருந்த லீச் (Leach) அம்மாவுக்கு. போதகர் இங்கேயிருந்து ஓர் கடிதம் எழுதினபோது அக்காலத்தில் பிலிப்பையின் தீவின் விஷயங்களைப் பத்திரிகைவாயிலாகப் படித்து சிலகாரியங்களை நிர்ணயித்து, தான் எழுதிய கடிதத்தில் 'பிலிப்பையன்தீவு அமெரிக்கா தேசத்தின் விசாரணைக்குள் வருவதே நல்லது என்றும் அப்படியே வரு'மென்றும் எழுதியிருந்தார். அதே ஆண்டு மார்கழிமாசம் யுத்தம் முடிவுக்கு வந்தபோது போதகர் கருதியபடி குறித்த தீவு அமெரிக்கர் ஆட்சிக்குட்பட்டது. அதன்பின்

லீச் அம்மா, முன் போதகர் எழுதிய கடிதத்தில் பிலிப்பையன்தீவைச் சுட்டி எழுதிய குறிப்பை, அக்காலத்தில் அமெரிக்க பிரசாதிபதியாயிருந்த உவில்லியம் மெக்கின்லி ( William Meckinley ) பிரபுவுக்குக் காட்டி, "நாம் மிஷன்வேலைசெய்யும் இடங்களில் இப்படியான ஞானவான்களைப் பிறப்பிப்பது நமது சுவிசேஷம். ஆகையால் இவ்வேலைக்கு உங்கள் அனுதாபம் வேண்டும்" என்று அம்மா கேட்க, குறித்த பிரசாதிபதி மனமுவந்து பொருளுதவிபுரிந்தார்.

வண்டியிற் போடப்பட்ட குதிரை தெருவை மாத்திரம் பார்ப்பதுபோல் அல்ல, எழுஇலை உருவப்பார்க்கும் மயில்போல் காரியங்களைத் தூரமாய் நோக்கி அதற்கேற்றபடி நடப்பார். இதைக் கவனித்த சனங்கள் பழமொழியாயும் பரிகாசப் போக்காயும் "பண்டிசுட்டானில் பன்றிநின்றால் ஹன்ற் போதகர் பண்டத்தரிப்பில் பதுங்குவார்" என்பர்.

## பொறுமைசாலி

துவாகரயுகத்தில் சீவித்தவர்களில் தருமபுத்திரன் பொறுமைசாலி என்று நம் இந்துசமயத்தவர்கள் பாராட்டுவார்கள். போதகர்அவர்கள் பொறுமைவிஷயத்தில் கலியுக தர்மபுத்திரனய் விளங்கினர்கள். தன் மனதிற்கு நோவு உண்

டாக்கும் விஷயங்களை மற்றவர்கள் பேசினால் அல்லது செய்தால் சிரிப்பார், அல்லது மௌனமாய் இருப்பார். அவர் பொறுமை, குடும்பசீவியத்திலும் சபையார் காரிங்களிலும் இனசன சம்பந்த விஷயங்களிலும் விளங்கினது. அவருக்கு விவாக பிராயம் வந்தபோது பலஇடங்களிலும் விவாகம் பேசி வந்தனர். அவைகளில் அனேககாரியங்கள் அமைந்திருந்தாலும் விவாகமுறையில் சமீபமான இடமே காத்திரமாய்க்கொள்ளவெண்டும் என்பது அவர் கருத்து. அந்தந்த ஊரில் இருப்பவர்கள் தன்தன் ஊரில் அல்லது சமீபஊரில் விவாகஞ் செய்ய வேண்டுமென்பது அவர்கொள்கை. அக் கருத்தின்படி தன் ஊருக்குச் சமீபமாயுள்ள மட்டுவில் என்ற கிராமத்தில் ஓர் இந்துசமயத்தில் பிறந்து விடுதிப்பாடசாலையில் படித்துக் கிறிஸ்தவவான இல்டா பர்வதம் என்னும் பெண்மணியை விவாகம் செய்தார். இந்தப் பெண்மணி "கண் முன் போற்றி காணுவிடத்தில் தூற்றும்" மனுஷரின் கேடான முறைக்கு முழுதும் மாறுனவ. தன் புருஷன் சமீபத்தில் இல்லாதவேளையில் அவருடைய வேலை குணவிசேஷம் முதலியவைகளைப் புகழ்ந்து தனக்கிருக்கும் புருஷ பக்தியை வெளிப்படுத்துவ. அதைக் கவனிப்பவர்கள் இவ இவ்வளவு புருஷபக்தி உடையவவோ என்று ஆச்சரியப்படுவர். புருஷன் கண்ணெதிரே நிற்கும் போது கோபம்மூளுஞ்சமயம் அவவுடைய பேச்

சும் தொனியும் வார்த்தைப்பிரயோகமும் அதிக கோபமூட்டுவதற்கேதுவாயிருக்கும். அப்படியான சமயங்களில் போதகர் சிரிப்பார், அல்லது மௌனமாயிருப்பார். வாசிக்கும் வேளையானால் மனைவியின்சத்தம் காதிற்படாதமுறையில் சத்தத்தை மேற்கொள்ளத்தக்க சந்தத்தில் வாசிப்பார். எழுதும் வேளையானால் அப்படி எழுதும் வார்த்தைகளை உரத்த சத்தத்தில் சொல்லி எழுதுவார். இப்படியான ஒரு தருணம் அவர்கள் வீட்டிற்குப் போனேன். அவ்வேளையின்நிலையை நான் பார்த்தபொழுது போதகரும் மனைவியும் 'சோக்கிறட்டீஸ் ஞானியும் சாந்தப்பியாளும்' வாழ்ந்த வாழ்க்கை செய்கிறார்களே என நினைத்தேன். அன்று போதகர் பாவித்தமுறை மௌனநிலையே. மனைவியின் உக்கிரப்பேச்சு முடிந்தவுடன் போதகர் என்னைப்பார்த்து, "தம்பி, ஒருபக்கத்திற் சண்டை நெடுக நில்லாது" என்றார். இவர் வேலைசெய்த சபையில் இருந்த ஒருவர் நியாயவீனமாய் வாதித்து, கோபம்மூண்டவராய் வீட்டில் போய் போதகருக்குத் தீங்குசெய்வதற்கு ஒரு ஆயுதம் எடுத்துவரும்போது, சனங்கள் குறிக்கஆளைப் பற்றிக்கொண்டார்கள். போதகர் சாந்தமாய், "விட்டுவிடுங்கள், அவர் தனக்குப் பிரியமானதைச் செய்யட்டும்" என்றார். சனங்கள் விட்டுவிடவில்லை. இதினிமித்தம் பல நஷ்டங்கள் அந்த ஆளுக்கு வரஇருந்தபோது போதகர் மனப்பூர்வமாய் மன்னித்து நஷ்டங்களைநீக்கி நன்மையே செய்துவந்தார்.

சபையானும் கிராமப்பாடசாலை உபாத்தியா யனுமாயிருந்த ஒருவர் ஒருநாள் அவர் முன்னின்று ஏசித்தூற்றித் தான் பல நஷ்டங்களைப் போதகருக்குச் செய்யவிருப்பதாய்ச் சொன்னபோது போதகர், "நீர் இவைகளையெல்லாம் செய்தால் நானும் உமக்கொன்று கட்டாயம் செய்வேன்" என்றார். அந்தமனுஷன் "எனக்கு நீர் என்ன செய்வீர்?" என்று முன்னிலும்பார்க்க உக்கிரத்தோடு கேட்க, போதகர், "நீர் எதைச்செய்தாலும் அதை நான் பொறுத்துக்கொள்ளுவேன்" என்றார். அத்தோடு உபாத்தியாயர் போய்விட்டார்.

## முகமலர்ச்சியுடையவர்

இவர் முகம் எப்போதும் சந்தோஷம் குடிகொண்ட புன்னகை முகமாகவே இருக்கும். சமாதானத்தின் சுவிசேஷத்தை பிரசங்கபீடத்தில் நின்று சந்தோஷத்துடன் பேசுவார். முகமலர்ச்சி சந்தோஷம் என்பவை வேளைக்குவேளை தோற்றுவதும் மறைவதுமாயிராது எப்பொழுதும் ஒரே நிலையில் துலங்கிக்கொண்டிருக்கும்.

## பரோபகாரி

இல்லத்தில் பசித்திளைத்து வருபவர்களை ஒருபோதும் வெறுமையாய் அனுப்பமாட்டார். வீட்டில் போசனமில்லாவிட்டால் சமீபமாயுள்ள கடையில் சாப்பிட்டுப்போகும்படி அதற்குரிய காசு கொடுத்தனுப்புவார். பலநிலைபாத்திரரான

சனங்கள் வந்துசேரும் சந்தையில் வஸ்திரகிலையில் கேடடைந்திருப்பவர்களைக் கண்டால் ஆணே பெண்ணே அவரவர்க்கு இசைந்தமுறையில் உடைகளை வாங்கி, அவர்கள் வீடுதிரும்பும்பாதையில் அவர்களுக்குப் பின்சென்று அதைக் கொடுத்துதவும் வழக்கமுடையவர்.

மாட்டுவண்டியிலோ குதிரைவண்டியிலோ தான் ஊழியத்திற்குப் போகும்போது வீதிகளிலும் தெருக்களிலும் நடக்கமாட்டாத ஏழைகள், நோயாளிகள், வயோதிபரைக் கண்டால் வண்டியைமறித்து அவர்களையும் ஏற்றிக்கொண்டுபோய் தனது பயண எல்லைக்குள் அவரவர் சேரவேண்டிய இடங்களில் விட்டுப்போவார். இது அவர்கள் இனத்தவர் சிலருக்கு ஏற்காததால் "போதகர் வண்டியைக்கட்டி கஞ்சல்களையும் குப்பைகளையும் ஏற்றிச் செல்வார்" என்பர்.

## கிரமமுடையவர்

அவர் சீவியத்தில் கிரமம் என்றால் என்னவென்று அறியலாம். போதகரின் அறையிற் போனால் எல்லாம் கிரமப்படி அமைக்கப்பட்டிருக்கும். புஸ்தகங்கள் பத்திரிகைகள் கிரமம் பூண்டு ஒருபக்கமாயும் சிற்றுண்டி சாப்பாட்டு வகைகள் ஒருபக்கமாயும் வேலைப்பாட்டிற்குரிய ஊசி, நூல், புரையல்ஊசி, செடிதாள், சிறியவாளி, உளி, சுத்தியல், ஆணி, கயிறு முதலியன ஒருபக்க

மாயும் ஒழுங்காக வைக்கப்பட்டிருக்கும். தான் செய்யத்தக்க வேலைகள் எல்லாம் தொழிலாளி இன்றித் தானே செய்துகொள்வார். பேனைக் கத்தி ஒன்று தவறாமல் அவர் சட்டைச்சாக்கில் இருக்கும். அதைக்குறித்து நான் விசாரித்தபோது "'ஒப்சேவர்' என்ற பத்திரிகையை தொடக்கிய எலியற் என்பவர், 'விஷம் தீண்டினால் உடனே கடிவாயைக் கத்தியால் வெட்டி இரத்தம் போக்க வேண்டும். அதுதான் முதற்தரமான வைத்தியம்' எனக்கூறியபடி அன்றுமுதல் எப்பொழுதும் கத்தியை என்னோடு வைத்திருக்கிறேன்" என்றார். குறித்தநேரத்தில் குறித்த இடத்தில் நிற்பார். கிரமத்தப்பு அவருக்கு வெறுப்பான ஒன்று. தெல்லிப்பளையிலிருந்து சாவகச்சேரியிலிருக்கும் மிஷன் ஊழியர்களுக்கு மாசவீதம் சம்பளம் கொடுக்க வரும் Rev. T. S. Smith பாதிரியார் ஒருமுறை குறித்தகிழமையில் வரத்தவறினார். அடுத்த கிழமை அவர் வந்தபோது, "ஐயரே, சென்ற கிழமை உமது கையைப்பார்த்து நான் வந்திருந்தேன், எனது கையைப்பார்த்து ஐந்து உபதேசிமார் வந்திருந்தார்கள்; அந்த ஐந்துபேரின் கையைப்பார்த்து ஐம்பது உபாத்திமார் வந்திருந்தார்கள்; ஐம்பது உபாத்திமாரைப்பார்த்து ஐந்நூறு கடன்காரர் வந்திருந்தார்கள். நீர் எல்லாரையும் காத்திருக்க வைத்தீர்" என்று கடிந்துகொண்டார்.

## சாதாரண சீவியமுள்ளவர்

ஊழியர்கட்கு மாத்திரமல்ல, தற்காலத்தில் பொதுசனங்களுக்கும் அவர் சீவியம் இவ்விஷயத்தில் போதனையும் மாதிரியுமானது. "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல காலவகையினுனே" என்று பாஷைமுறையில் நன்னூலாசிரியன் வகுத்துவைத்ததை, தற்காலசனங்கள், "பழையன கழித்தலும் புதியன புகுத்தலும்" என்றமுறையில் திருத்தி, தங்கள் சீவியத்தை ஆக்கிக்கொள்ளுகின்றனர். பலர் எடுபாடான சீவியத்தில் ஏற்பட்டு உள் அழுகின பூசினிக்காய் போல் வெளியே வேஷங்களையும் மால்களையும் பூண்டு உள்ளே அழிவுகளையும் சிதைவுகளையும் உள்ளவர்களாய் சீவித்துவருகிறார்கள்.

போதகர், தன் உழைப்புக்கு மிஞ்சிய செலவு ஒருபோதும் செய்யமாட்டார். அவர் கடைசியாய் எடுத்த சம்பளம் 45 ரூபா. அதற்குள் தன் குடும்பசெலவு, பிள்ளைகளின் படிப்பு, உடுப்பு, பரோபகாரச்செலவு, பயணச்செலவு, சம்பாதிப்பு எல்லாவற்றையும் செய்துகொண்டார். போசன வகையில் நமதாண்டவர், "உங்கள்முன் வைக்கப் படுபவைகளைப் புசியுங்கள்" என்றதுபோலவும் இந்துசமயத்தில் சீவன்முத்தர் "கண்முன் நின்றவை புசிப்பார்" என்றதுபோலவும் நமது தேசத்திலுண்டாகும் தானிய வகைகளையும் பனைமரப் பிரயோசனங்களையுமே விருப்புக்குரிய ஆகாரங்க

ளாகக் கொண்டார். புழுக்கொடியல், பனாட்டு, எள்ளு, கொள்ளு, பயறு முதலியன உண்ணத் தக்கமுறையில் பாகம்பண்ணப்பட்டு அவர் அறை யில் ஒழுங்காக வைக்கப்பட்டிருக்கும்.

அவருடைய உடை எப்போதும் ஒருதன்மை யதே. கொய்யப்பட்ட ஒற்றைப்பட்டுவேஷ்டியை உடுத்து, தலையில் பழையகாட்டுலேஞ்சி தலைப் பாகையாகக் கட்டி, பொத்தான் வெளியேதோற் றும் மூடுசட்டைபோட்டு, சாதாரண செருப்போடு வெள்ளை உறைபாவியக் கறுப்புக்குடையுமே இவ ரது சபை சந்திப்புக்குரிய உடுப்பு. தாதுவளங் காய் பரிமாணமான கடுக்கன் ஒருசோடு இவர் காதில் மரணபரியந்தம் தொங்கியது. நவீன நாகரீகங்கள் புகுந்தகாலத்தில் மற்றப் போதகர் மாரின் உடைமுறையில் பேதங்கள் காணப்பட்டும் இவர் இந்தமுறையை ஒருபோதும் மாற்றவில்லை. செலவை அதிகப்படுத்தி காசுக்குக் தேவைப் படாமல், காசைக்கண்டு அதற்குத்தக்கதாய் செலவுசெய்தபடியால், கடனற்ற ஒருவராய்ச் சீவித்தார். பழுதுபட்ட ஒரு வண்டியின் தட்டை எடுத்து அதற்கு கத்திரிப்பா சாயலான கால் போட்டு அதை மேசையாகவும் பறவைகளின் இறகுகளை பேனைரூபமாய் வெட்டிப் பேனையாகவும் பாவித்தார்.

## கிறீஸ்தசீவியம்

அவர் விசுவாசம், சாஸ்திர விருத்தியின் பேருய் தாக்கப்படாமல் உறுதியாகவிருந்தது. சாஸ்திரங்களுக்கு மார்க்கத்தைத் திருப்பாமல் மார்க்கத்தை நிலைக்களமாய்க்கொண்டு சாஸ்திரங்களை அதற்குநேராய்த் திருப்பினுர். உறுதிப்பாடான விசுவாசியாயிருந்து தான் விசுவாசித்ததையே பிரசங்கித்து பிரசங்கித்ததையே விசுவாசித்துவந்தார். பஞ்சாங்கக் கணிப்பு, சகுனம், நாட்பார்த்தல், கிறீஸ்தவர்களுக்கு அடாதென்று பிரசங்கிக்குமுன் தாமே அதை முதலாவதாய்க் கைக்கொண்டார். தன் மூத்த மகளுக்கு விவாகம் நடந்தபோது மற்றவர்கள் கவனிக்கத்தக்கமுறையில் அட்டமி நவமி மரணயோகம் நிறைந்த அசுப தினமாகவே அந்நாள் இருந்தது. அப்போது இவருடைய இனத்தவரும், அக்காலத்தில் தென்மராட்சியில் பிரபலம்பெற்றிருந்தவருமான வாரித்தம்பி உடையார், "போதகர் தன்மகளுக்கு விவாகஞ் செய்கிறதென்று நெருப்புக்குள் தள்ளிவிடுகிறுர்" என்று சொன்னுர்.

கிறிஸ்துரட்சகர்தான் இரட்சகர், வேறு ரட்சகரில்லை. இரட்சிக்கப்படுவதற்கு அவர்வழியேயல்லாது வேறுவழியில்லை என்று சொன்னுல் அதற்கு வேறு வியாக்கியானங்கள் உண்டாக்கமாட்டார்.

## செபசீவியம்

இச்சீவியத்துக்குரிய விசேஷ ஆதாரம் அவரில் விளங்கிய பரம தேவஐக்கியமே. காலையில் 4 மணிக்கு விழித்து தனிச்செபம், வேதப்படிப்பு, வாசிப்பு, தியானம் முதலியவைகளுக்கு சில மணித்தியாலங்களைக் கழிப்பார். இப்படிப்பட்ட நேரங்கள் மாத்திரமல்ல, பொதுவாய் அவருடைய சீவியத்தின் ஒவ்வொரு நிமிஷமும் பரம சம்பந்த சிந்தனையாகவேயிருக்கும். சடப் பொருள்களினழிவும் நித்தியத்தின் நிச்சயமுமாகிய இரண்டும் அவருள்ளத்தில் ஆழமாய்ப் பதிந்திருந்த சத்தியங்கள். எந்தமனுஷனை எங்குகண்டாலும் அவனுக்கு ஆன்மசம்பந்தமான ஒரு வார்த்தையைப் பொருத்தமான முறையில் சொல்ல அவர் நாவு ஆயத்தமாகவிருக்கும். "பேசுவதுந் திருவாயால் மறைபோலுங் காணேடி" என்பது அவருக்குப் பொருந்தும். சாவீட்டிலும், விவாகவீட்டிலும், சந்தைகடைகளிலும், சந்திக்குமிடங்களிலும் ஒரு பிரசங்கமல்ல, உணர்வுறுத்தும் ஒரு வார்த்தையே சொல்லுவார்.

சந்தைநாட்களில், ஏராளமான சனங்களால் நிறைந்திருக்கும் சந்தையிலேயோரமாய் நின்று, இன்னும் ஐம்பது வருஷத்தால் இங்குநிற்கும் ஒருவரும் இருக்கமாட்டார்கள். இப்போ இல்லாத வேறு

சனங்கள் வந்து இதை இந்தவிதமாய் நிரப்புவார்கள்" என்று சொல்லக் கேட்கும் எல்லாரும் உணர்வடைவார்கள். மற்றவர்களுக்கு மாத்திரமல்ல, தனக்குமே தாம் பேசிக்கொள்வார். ஒரு நாள் அவர் தனிநிலையிலிருந்து பேசிக்கொண்டிருந்தார். சத்தத்தைக்கேட்டு, நான் கிட்டிச்சேர்ந்த போது அவர், தம் கைகளை மடியில்வைத்து, "அழகிய கைகளே, பெலமுள்ள கால்களே, காணும் கண்களே, பேசும் நாவே நீங்கள் எல்லாரும் அழகற்று அருவருப்பின் நிலையடைந்து மண்ணுக்குத் திரும்புவீர்களென்று உங்களுக்குத் தெரியுமா? தெரியாதிருந்தால் அறிந்துகொள்ளுங்கள்" என்றார். இவ்விதமாய் அவர் செபமும், தியானமும் வார்த்தைக் கலப்பாய் இருக்கும். ஒருமுறை அவர் என்னைப்பார்த்து, "'நீ உன் அறைவீட்டில் பிரவேசித்து கதவைப்பூட்டி அந்தரங்கத்திலிருக்கிற பிதாவை அந்தரங்கத்தில் வேண்டிக்கொள்' என்று ஆண்டவர் சொன்னார். அந்தமுறையில் செபிக்கும்போதும் மனதின் எண்ணங்கள் சிதைவுறாமல் இருக்கும்படி உன் செபத்தின் சத்தம் மற்றவர்களுக்குக் கேட்காமல் உன் செவிகளில் மாத்திரம் விழுந்து உன் மனதை வார்த்தையின் உச்சரிப்போடு கலந்தொருமுகப்பட உன் செபத்தின் எண்ணங்களை மெல்லிய குரலில் உச்சரித்துச் செபி" என்று அவர் சொன்னதினால் இவ்விதமான பயிற்சி அவரிலும் இருந்ததென்று தெரிகிறது.

அவர் இருதயம் எவ்வேளையிலும் தேவனுடைய இராச்சியத்துக்கடுத்த விஷயங்களால் நிறைந்திருந்ததினாலே எப்போதும் பரமஐக்கியத்திலிருந்தார். அதனால் அவர் சீவியம் பரிசுத்தமாய்த் துலங்கியது.

## அறிவாராய்ச்சி

நிலைக்களமாய் நீரையுடைய கிணறு மேலும் மேலும் ஊறி புதிய நீரால் பழையநீரையும் புதுப்பிப்பதுபோல இருபாஷைக் கல்வியில் தேர்ந்திருந்தாலும் நாள்விதம் அறிவை விருத்தியாக்குகிறவராய் இருந்தார். புதிது புதிதாய் வெளிப்படும் புஸ்தகங்களை வாசித்தும், புஸ்தகங்களையும் துண்டுப் பிரசுரங்களையும் எழுதி அச்சிட்டும் பத்திரிகைகளுக்கு விஷயதானஞ்செய்தும் வந்தார். "கிறிஸ்துமார்க்க அத்தாட்சிகள்" "கிறிஸ்துமார்க்க ஆட்சேப சமாதானம்" என்னும் நூல்களை எழுதினார். புத்தகமுறையில் அறிவைச் சம்பாதிக்தவராய் மாத்திரம் இராமல் மனுஷரிடத்திலிருந்தும் அறிவைச் சம்பாதித்தார். "மடையன் எங்கும் படிப்பிக்கவும் ஞானவான் எங்கும் கற்றுக்கொள்ளவும் போவான்" என்ற முதுமொழிப்படி அவர் எங்கும் எல்லாரிடத்திலும் எப்போதும் படிக்கிறவராய் இருந்தார்.

அக்காலத்தில் அவருடைய போதகவிசாரணைக்குள்ளிருந்த ஓட்டுவெளியென்றவோர் கிராமத்தில்,

சின்னக்குட்டியென்னும் ஒரு வயோதிபக் கிறீஸ்தவன் இருந்தார். சில ஓய்வுநாட்களில் எங்களில் சிலரையும் கூட்டிக்கொண்டுபோய் அவர்வீட்டில் செபக்கூட்டம்வைப்பதுண்டு. ஒருஓய்வுநாள் இந்த முறையாய்ப் போகும்வழியில் அவர், "சின்னக்குட்டி வீட்டுக்கு உபதேசிக்கப்போகிறேன் என்றெண்ணுகிறீர்களோ? இல்லை, உபதேசம்பெறவே போகிறேன்" என்றார். காரியம் அப்படியே அன்று நடந்தது. போதகர், யோவான் சுவிசேஷம் 3-ம் அதிகாரத்தை வாசித்து "மாம்சத்தினால் பிறப்பது மாம்சமாய்இருக்கும்; ஆவியினால் பிறப்பது ஆவியாய்இருக்கும்" என்பதன் கருத்தென்ன? என்று கேட்க, வயோதிபத் தள்ளாமையால் படுக்கையில்இருந்த சின்னக்குட்டி "இந்து சமயமுறைப்படி உயிர்கள் காலந்தோறும் உடல்களை எடுக்கும்முறையில் உண்டாகும் பிறப்புகளினால் கர்மநிவாரணமுண்டாகி ஆன்மாக்கள் கடவுளுடன் லயமாகுமென்பர். பிறவிகள்தோறும் ஆவியெடுக்கும் உடம்புகள் எல்லாம் மாமிசமே. மாமிசஉடம்புக்கு மாமிசத்தன்மை நீங்காது. ஆகையால் எத்தனை மாமிசப்பிறவியெடுத்தாலும் அத்தனையும் மாமிசமாகவேயிருக்கும். ஓர் மாறுதல் வேண்டுமானால் அது உன்னதத்திலிருந்து கடவுளாவியால் பிறக்கவேண்டும் என்பதே கருத்து" என்றார். திரும்பப் போதகர், "பலரும் கிறிஸ்தவர்களாய் வருகிறார்களே, சிலகாலஞ்செல்ல

அவர்களில் அநேகர் பின்வாங்கிப்போகிறார்களே, அதற்கு நியாயமென்ன?" என்றார். சின்னத்த குட்டியார், "ஐயா வேட்டைக்குப் போகிறவர்கள் மான்கூட்டத்தைநோக்கிச் சுடுகிறார்கள். சில மான்கள் உயிர்நிலையில் குண்டுபட்டு விழும். சில வாலிலும், சில காலிலும் குண்டுபட்டாலும் அப்போது விழக்கூடும். ஒருகுண்டும்படாவிட்டாலும் வெடிச்சத்தத்தின் அதிர்ச்சியினாலும் சிலவிழும். ஆனால் இலக்கிலக்ஷத்தால் உயிர்நிலையில் குண்டுபட்ட மான் தவிர மற்றதெல்லாம் எழுந்தோடிவிடும். இவ்வண்ணமே இருதயத்தில் சரியாய் சுவிசேஷ வசனம் விழுந்தவர்கள் நிலைத்திருப்பர். கால் வால் முதலியவைகளில் குண்டுபட்டமான்போல் சிலர் உணர்ச்சியினாலும், அதிர்ச்சியினாலும் வெளித்தோற்றங்களினாலும் வேறு நோக்கங்களினாலும் சிலநிமிஷங்களுக்குப் படுத்துக்கொண்ட மான் போல் கிறீஸ்தசார்புகாட்டி ஒருபோது சபையிலும் சேர்ந்துகொள்வர். பின் சிலநாட்களில் ஓடிப்போவார்கள்" என்றார். கூட்டம்முடிந்து திரும்பி வரும்வழியில் போதகர் எங்களைப்பார்த்து, "நான் சொன்னது எப்படி?" என்றார். நாங்களெல்லாரும் ஆச்சரியப்பட்டோம்.

இதுசம்பந்தமாய் போதகர் தன்வியஷத்தை ஒட்டிப்பேசிய ஓர்வார்த்தையைக் குறிப்பிட விரும்புகிறேன். "ஒருநாள் எனக்கு பூரணமாய் முடிந்ததாயிருக்கவேண்டுமானால் எனக்கு மூன்று காரியங்தேவை. 1. வாசிப்பினாலோ பத்திரிகைப்

படிப்பினலோ என் அறிவுவிஷயத்தில் ஓர் புதிய அறிவை அடையவேண்டும். 2. வேதத்திலிருந்தோ பக்திக்குரிய புஸ்தகங்களிலிருந்தோ தேவனுடைய இராச்சியத்துக்கடுத்த ஏதோ ஓர் புதியசத்தியத்தை அறியவேண்டும். 3. என் ஆகாரவிஷயத்தில் ஊர்அரிசிக்கஞ்சியாய் ஒரு கோப்பைக்கஞ்சி குடிக்கவேண்டும்" என்றார்.

## சபைஊழியம்

சீவன்களிடத்தில் சுவாசமுறையில் இரேசக, பூரகவிஷயங்கள் இடைவிடாமல் நிகழ்ந்துகொண்டிருப்பதுபோல் போதகரும், தான் அழைக்கப்பட்ட பரிசுத்த அழைப்பு, ஒப்புவிக்கப்பட்ட ஊழியப் பொறுப்பு ஆகிய இரண்டுவிஷயங்களைக் குறித்தும் இடைவிடா நினைவுள்ளவராகவிருந்தார். சபையாகிய திராட்சத்தோட்டத்துக்கு உண்மையான வேலைக்காரனாகவும் மந்தையாகிய சபைக்குச் சரியான மேய்ப்பனாகவுமிருந்தார். ஓய்வுநாளாராதனையில் சபையாரின் தலைக்கு மேலாகப் பிரசங்கியாமல் தானறிவாளியாகவிருந்தாலும் தன்னறிவின் நிலையை மறந்து சாதாரண சனங்களின் நிலையில் தன்னைவைத்து, வந்திருப்பவர்கள் ஒவ்வொருவரும் விளங்கிக்கொள்ளத்தக்கமுறையில் பிரசங்கிப்பார். மேலும், தனது போதனைகளை சனங்கள் விளங்குகிறதற்கு மாத்திரமல்ல, அவர்கள் மனதில் என்றும் நிற்கும் முறையில் பொருட்களைக் கொண்டுவந்து காட்டிப் பிரசங்கிப்பார்.

தேங்காய், பாவை, குழல், கலசம், வாணம் என்பவைகளை அவர் பகிரங்கக்கூட்டத்தில் பாவித்ததைக் கண்டவர்கள் இன்றும் சாட்சியிடுவர். பிரசங்க நேரத்தில் வராதவர்களைக் கவனித்திருந்து அவர்களைப் போய்ச் சந்திப்பார். ஓய்வுநாட்பள்ளிக்கூட வேலையிலும் அவருக்குப் பங்குண்டு. பாடம் முடிந்தபின் பாடமுழுவதையும் தொகுத்து பிள்ளைகளின் மனதிற் படியும்படி ஒரு நல்ல கதையைச் சொல்லி புத்திபுகட்டிச் செபித்தனுப்புவார். ஓய்வுநாளாசரிப்பைக் குறித்து விழிப்பாயிருப்பார். "ஓய்வுநாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக" வென்றால் அந்த நினைவு திங்கள் தொடங்கி சனிவரையும் இருக்கவேண்டுமென்று சொல்வார். ஓய்வுநாளாசரிப்பில் அவர் மிகு திட்டவட்டமாயிருந்தார்.

ஒருநாள் இவர், தான் விற்கவிரும்பிய ஒரு பொருளை கொள்வதற்கு ஒருவர் வந்தார். போதகர் அவரைப்பார்த்து, "இன்று ஓய்வுநாள், நாளைக்கு வாரும்" என்றார். அந்த மனுஷன் "நாளைக்கு விலையைத் தீர்க்கலாம், இப்போ அதன் உத்தேசம் என்ன சொல்லும்?" என்றார். போதகர், "வாலைப் பிடித்திழுத்துத் தலையை அமர்த்தப்பார்க்கிறீர்? ஓடிப்போம்" என்று அகற்றிவிட்டார். தன்னைப் போலவே தன் வீட்டாரும் அதை ஆசரிக்க வேண்டுமென்று வாஞ்சித்தார். ஒரு ஓய்வுநாட் சாயந்தரம் அவருடைய மகன் பனைப்பக்கத்தில்

திங்கள் காலை நேரத்தோடு வேலைதொடங்குவதற்காக ஞாயிற்றுக்கிழமை சாயந்தரம் புறப்பட்டபோது, "மகனே எலிசா, நீ ஓய்வுநாளில் பயணம் பண்ணக்கூடாது. ஓய்வுநாளை அசாரம்பண்ணி நட்டப்பட்டுப்போகாதிருங்கள்" என்றார்.

## குடும்ப சந்திப்பு

இக்காலத்தில் ஊழியர்களுக்கு இதுவிஷயத்தில் பல பேத அபிப்பிராயங்களுண்டு. "குடும்பங்களைச் சந்திக்கும் போதகருக்கு ஆலயத்தைச் சந்திக்கும் சனங்களுண்டு" என்றபடி அடிக்கடி தனது சபையின் குடும்பங்களைச் சந்தித்துவந்தார். ஆலயத்தோடு சம்பந்தப்பட்ட எல்லா ஆராதனைகளையும், ஆட்கள் போனாலும் போகாதிருந்தாலும் மனந்தளராது நடத்துவார். சிலசமயம் வெள்ளிக்கிழமை சாயந்தரக்கூட்டம் நடைபெறும்போது ஆலயத்தில் ஒரு சபையாளும் போதகரும் மாத்திரம் காணப்படுவதுமுண்டு.

## அன்பின் விசாரணை

எப்படிச் சபையில் ஆவிக்குரிய விஷயங்களைக் கவனித்து வந்தாரோ அப்படியே அவர்கள் சரீரத்தேவைகளையும் கவனித்து வந்தார். ஒரு குடும்பத்தில் ஒரு வியாதிக்காரனைப் பார்க்கப்போனால் வாசிப்பதோடும் ஜெபிப்பதோடும் மாத்திரமல்ல, ஏதோ ஒரு சொற்ப பொருளுதவி செய்துவிட்டே

திரும்புவார். வறிய சபையாரின் சிறுபிள்ளைகளைத் தனிமையாய்க் கண்டு, வீட்டில்நடக்கும் சாப்பாடு சமையல் விஷயங்களை விசாரித்து கஷ்டநிலையறிந்து பிள்ளைகள்மூலமாய் பொருளுதவி பெற்றோருக்கு அனுப்புவார். ஒருவனுடைய ஆத்துமா கெட்டுப் போகிறதேயென்ற எண்ணத்தின் கவனம்போல் அவன் பட்டினி கிடக்கிறானே என்ற எண்ணமும் அவருக்குச் சரியாகவிருந்தது.

1884-ம்ஆண்டு அடித்த கடும்புயல் வெள்ளப் பெருக்கிற்கு முதல்நாள் தன் வீட்டுச்செலவுக்காக ஒரு சாக்கரிசி வாங்கி வைத்திருந்தார். புயல் உண்டான அடுத்தநாள் சபையாரின் பரிதாப நிலையைக்கண்டு, ஒவ்வொரு சபையார்வீட்டுக்கும் ஒருகொத்தரிசியும் ஒரு தேங்காயுமனுப்பி 'இப்பொழுது முதல் கஞ்சிவைத்துக் குடியுங்கள்' என்று சொன்னார். சபையாரில் ஏழைக்குடும்பங்களாயிருந்தவர்களை அதிகமாய் விசாரித்துவந்தார். கிறிஸ்த குடும்பங்களைக்குறித்து ஓர் உரிமை அவருள்ளத்திலிருந்தது. தொழிலில்லாதவர்களுக்கு தொழில் காண்பித்தும் ஏழைக் குடும்பங்களின் பிள்ளைகள் படிக்க வழிஏற்படுத்தியும், வளர்ந்த பிள்ளைகளுக்கு விவாகம் ஏற்படுத்தும்முறையில் எங்கே ஓர் ஆண் இருக்கிறது, எங்கே ஓர் பெண் இருக்கிறதென்று கூர்மையாய்க் கவனித்து இசைவு பார்த்து விவாகமாய் ஏற்படுத்திக் கிறிஸ்த குடும்பங்களை உண்டாக்கினார். இவரால் ஏற்படுத்தப்

பட்ட கிறிஸ்த குடும்பங்கள் அங்கங்கே இதற்குச் சாட்சியாய் விளங்குகின்றன.

## சுவிசேஷவேலை

மனுஷனின் ஆன்ம ஈடேற்றம் இயேசுரட்சகரைப்பற்றும் விசுவாசத்தினால் மாத்திரம் ஆக வேண்டிய ஒன்று. இச்சத்தியம் அவர் மனதில் ஆழமாய்ப் பதிந்தபின் தீப்பற்றியெரியும் வீட்டின் தீயணைக்க முடியாமுறையில் பொருள்களைத் தப்புவிப்பதில் மனிதர் ஆத்திரப்படுவதுபோல் இக்காத்திரமான காரியத்தில் எப்போதும் ஆத்திரவுணர்வுள்ளவராகவிருந்தார்.

எனக்குச் சாவகச்சேரிச்சபையோடு சம்பந்தப்பட்ட நாற்பத்தேழுவருஷ அனுபவங்களுண்டு. இவ்வளவு காலத்திலும் கனம் ஹென்ற் போதகர் காலத்தில் நடந்த சுவிசேஷ வேலையே அதிகம் என்று சொல்லலாம். மாசத்தில் ஒரு சனிவாரத்தை 'சுவிசேஷ சனிவாரம்' என்று வகுத்து அந்த நாளில் கிராமப்பாடசாலைக் கிறீஸ்த உபாத்திமாரையும், உபதேசிமாரையும், வேலையில் கரிசனையுள்ள சபையாரையுஞ் சேர்த்து, காலையில் தனது வண்டியைக் கட்டி மத்தியானச் சாப்பாட்டுக்குரிய சாமான்களை ஏற்றி மந்துவில், சரசாலை, மட்டுவில், மீசாலை, தனங்கிளப்பு, பெரியமாவடி, கல்வயல் முதலிய அயற்கிராமங்களில் போய்த் தங்கி கூட்டங்கூட்டமாய் குடும்பங்களைச் சந்தித்து, அன்

திரவில் அந்தந்தவிடங்களிலுள்ள கிராமப் பாடசாலையில் பகிரங்க சுவிசேஷ கூட்டங்கள் நடத்தி வந்தார். அடுத்துவரும் ஞாயிற்றுக்கிழமை ஆராதனை முடிவில் சனிக்கிழமை வேலையைப்பற்றிய அறிக்கையைச் சபையிற் சொல்ல ஒருவரை ஏற்படுத்துவார். பாடசாலைகளை அடிக்கடி சந்தித்து மாணவருக்குள் கூட்டங்கள் வைத்தார். நிலாக் கூட்டங்கள் ஒழுங்காய் நடைபெற்றன. நிலாக் கூட்டம் வைப்பாராகுல் ஏராளமான சனங்கள் வந்திருக்கவேண்டுமென்பது அவர் வாஞ்சை. இது சம்பந்தமாய் 'வயல்நிலம் விசாலமாயிருந்தால் எங்கேயாவது ஒரு விதை பலன்தரும்' என்று சொல்வார்.

சாவகச்சேரி ஆலயத்துக்குச் சமீபமாய் இப்போ ஆசிரியகலாசாலை இருக்கும் மிஷன்வீட்டு விறாந்தையில் சனிக்கிழமை காலைதோறும் இந்து சமய குடும்பங்களிலிருந்து 15 வயது கடந்தோரான வாலிபப்பிள்ளைகளைச் சேர்த்து, போதகர், அக்காலத்தில் ஓர் விசாரணை வகுப்பு நடத்திவந்தார். அந்த வகுப்பிலிருந்த சிலர் அனுசாரிகளாயிருந்து ஞானஸ்நானமும் பெற்றனர் என்பது அக்காலத்தில் எனக்குத் தெரியும். 38 வருஷங்களுக்குப் பின் நான் இவ்விடம் சபைஊழியப் பொறுப்பேற்று வந்தபோது, அவ்வகுப்பிலிருந்த வாலிபர் தற்போது வயது பின்னிட்ட மனிதராய் விட்டனர். அவர்களிற் சிலரைத் தேடிப்போய்

அவர்கள் மார்க்க நிலைபரங்களையும் அக்கால வகுப்பு விஷயங்களையும் பற்றிப் பேசியபோது "போதகரின் போதனையைக் கேட்டும் அவர் சீவியத்தைப் பார்த்தும் அதில் மனம்படிந்து ஞானஸ்நானம் பெற்றோம். சிலகாலத்துக்குள் அவர் மரித்து விட்டார். பின் அதை ஈட்டவும் தீட்டவும் தக்க தருணம் நமக்குக் கிடைக்காததால் நாம் அதை விட்டுவிடவேண்டி வந்தது" என்றார்கள். ஊழியர்களாகிய நாம், நெடுந்தீவில் மாடுகளுக்கு அவ் வூரார், பேர்க்குறியை மாத்திரஞ்சுட்டுப் பின் அதின்விஷயமாய் யாதோர் கரிசனையுமெடாது காட்டில் விடுவதுபோல் விட்டால் அவர்கள் பின்வாங்கிப் போவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. போதகர் பின்னும் சிலவருஷங்கள் சீவனோடிருந்திருப்பரேல் அந்த விசாரணைவகுப்பில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் எல்லாரும் இப்போது ஒவ்வோர் கிறீஸ்த குடும்பங்களாகவே இருப்பார்கள்.

நமது ஆண்டவர், (மத்தேயு 28 : 19, 20-ல்) சொன்னபடி "நீங்கள் புறப்பட்டுப்போய் சகல சாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுங்கள்" எனப் பிரித்து முடித்துப் பாதிப் படிப்போடு நிற்கிறோம். வாக்கியத்தைத் தொடுத்து, "கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும் படி அவர்களுக்கு உபதேசம்பண்ணுங்கள்" என்ற பாகம் பலவேளை மறக்கப்படுகிறது.

அருணை



கூட்டமாய்ச் செய்யும் வேலை மாத்திரமல்ல, தனித்தனியாள் வேலையிலும் அதிக கரிசனையுள்ளவர். சில நடைய பேரைக் குறிப்புப்புத்தகங்களில் குறிப்பிட்டு அவர்களை அடிக்கடி முறைமுறையாய்க் கூப்பிட்டுப் பேசிச் செபித்து வருவார். இக் குறிப்புப் புஸ்தகத்தைக் கண்ட சிலர் தங்கள் பெயர்கள் அதில் எழுதப்பட்டிருந்ததைக் கண்டு வியப்படைந்தனர். இப்படிக் குறிக்கப்படும் பெயர்கள் பல வயதினரதுமே.

இவர் தம் சென்னஸ்தானமாகிய பெரிய மாவடிக்கு அடிக்கடி போவார். அங்கு அருணர் என்ற பெயருள்ள ஒரு வயோதிபன் அவர் குறிப்பிட்ட ஆட்களில் ஒருவர். அருணர் வீட்டில் ஆரம்பத்தில் போய் வாசித்துப் பேசிய காலங்களில் அவர் கவனமாய்க் கேட்டார். சில காலத்தின் பின் போதகர் போய் வாசிக்கப் புஸ்தகம் எடுத்தவுடன் அருணரும் கத்தியல் எடுத்துக்கொள்வார். போதகர், வாசிக்கத்தொடங்க அருணரும் அடிகல்லில் அடிக்கத்தொடங்குவார். ஏன் இப்படிச் செய்கிறீரென்று போதகர் கேட்டபோது அருணர், " ஐயா, நீர் ஆரம்பகாலத்தில் வாசித்தபோது அது எனக்கு விருப்பமாயிருந்தபடியால் ஆவலாய்க் கேட்டேன். திரும்ப நான் கேட்டகாரியங்கள் என் மனதில் ஏதோ கிரியைசெய்யத் தொடங்குகிறது போல் தெரிகிறது. இப்படி விட்டுவிட்டால் அது என் சனத்தார்மத்தியில் பிரிவினை

களையும் விரோதங்களையும் எழுப்பும். உங்களைப் பேசாதபடி மறிக்கமுடியாது. ஆகையால் உங்கள் சத்தம் என் செவிக்கேறாமல் அடிக்கிறேன்" என்றார். இச்சம்பவத்தை போதகர் எழுதிய கிறீஸ்துமார்க்க அத்தாட்சிகள்" என்ற நூலில் எழுதியிருக்கிறார்.

இப்போதும் பெரியமாவடியில் சீவிக்கும் அவருடைய தமையன் விசுவநாதரின் மகன் தாமோதரம்பிள்ளையினுடைய வீட்டுக்கு ஒவ்வொரு ஓய்வுநாட்சாயங்காலத்திலும் வண்டிகட்டி, தவறாது என்னையும் கூட்டிக்கொண்டு போவார். சிலநாட்களின்பின், "ஐயா, எத்தனையோ குடும்பங்கள் இந்த ஊரிலிருக்க, ஒரே குடும்பத்துக்கு நீங்கள் ஏன் திரும்பத்திரும்பப் போகிறீர்கள்?" என்று கேட்டேன். அவர், "தம்பி, இவன் இந்த ஊரில் அதிகம் செல்வாக்குள்ளவன். அவனைப் பார்த்து அவன் பின்னே போகும் அநேகர் இக்கிராமத்தில் உண்டு. அவன் கிறீஸ்தவனானால் அவனோடு பலர் சேர்ந்து வருவார்கள்" என்றார். இது கொஞ்சம் மார்க்கமுறையில் சிறப்பற்ற நினைப்பாகவிருந்தாலும் பலரும் கிறீஸ்தவர்களாய் வரவேண்டும் என்னும் அவருடைய ஆசையை வெளிப்படுத்தினது.

இவரிற் பகைகொண்ட ஒருவர், அவருக்கு வசைமொழியாய்ச் சொன்ன ஓர் வார்த்தையுண்டு. "கன்றுப்போதகருக்கு இரண்டேயிரண்டு வாஞ்

சைகள் உலகத்தில் உண்டு. (1) தன்னினத்தார் சனத்தாரெல்லாரும் நல்லாய் வாழ்ந்திருக்கவேண்டு மென்பது. (2) உலகத்திலுள்ள சனங்களெல் லாரும் கிறீஸ்தவர்களாய் வரவேண்டு"மென்பது. தனித்தாள் முறையிலும் பகிரங்க கூட்டத்திலும் மாத்திரமல்ல வீதிகளிலும் வழிகளிலும் சந்தை களிலும், கடைகளிலும், விருந்துவீடுகளிலும், விவாகவீடுகளிலும், ஏதோ ஓர் சத்தியத்தைச் சொல்லாமல் விடமாட்டார். ஏனெனில் அவர் சுவிசேஷத்தினால் நிறைந்த மனுஷனாகவிருந்தார்.

தனித்தாள் வேலையில் போதிப்பதும் படிப் பிப்பதும் மாத்திரமல்ல, ஆட்களின் தன்மையைக் கண்டு அவரவரை ஏவியும் தைரியப்படுத்தியும் வரும் முறை மிகுதியாய் அவரில் இருந்தது. அவர் சொன்ன வாக்குகள் எவ்தலின் வாக்குகளாக மாத்திரமல்ல, தீர்க்கதரிசன வாக்குகள்போலவு மிருந்தன. ஒருமுறை அவர் என்னை நோக்கி என் பெயரை விளித்து, " நீ ஓர் சுவிசேஷஊழியனாய் வரவேண்டுமென விரும்புகிறேன். நீ அதை நினைத்து நட" என்றார்.

இவ்வுரைச் சேர்த்தவரும் தற்போது சபா சங்கத்தில் அனுபவமுள்ள ஊழியனுமாயிருக்கும் ஒருவர் வாலிபப் பிராயமான காலத்தில் போதக ரோடு நெருங்கிய பழக்கமும் சிநேகமுமாயிருந் தார். அவர் ஒருநாள் போதகரின் வீட்டுத் தெரு வால் வரும்போது, போதகர் வீட்டிலிருந்து ஆத்

திரமான அலுவலுக்குப் போகிறவர்போல் தெரு வில் அவரைச் சந்தித்து, அவர் பெயரை உச் சரித்து, "நீ படித்து முன்னேறி ஓர் பிரயோசன மான மனுஷனாய் வரவேண்டு"மென்று சொல்லிச் சடுதியாய்ப் பிரிந்து வீட்டுக்குப் போனார். இது தான் அவர் அந்த வாலிபனுடன் கடைசியாகப் பேசின வார்த்தை.

## சனசங்க ஊழியம்

சனசங்க சேவையில் ஈடுபட்டு உழைக்க இவ ருக்கு இருந்த மனவிருப்பத்திற்கேற்றவாறு சன சங்கத்தில் ஓரிடம் இவருக்கு இருந்தது. அவர் தன்னை ஒரு சாதாரணமனுஷனாக எண்ணிச் சாதா ரண சீவியம்செய்துவந்தாலும் சனசங்கம் இவரை மேல்நிலையிலேயே வைத்திருந்தது. இவர் போதகராய் கிறீஸ்தசபைக்குமாத்திரமல்ல இதர மார்க்கத்தாருக்கும் போதகராகவேயிருந்தார். இவ ரைப்பற்றிய மதிப்பினாலும் பட்சத்தினாலும் ஆலயஆராதனையில் பல இந்துக்களும்வந்து சமுகமாயிருப்பர். இவருடைய வயது, இவ ரடைந்த அறிவு, இவரில் விளங்கிய தன்மை இவைகளே சனசங்கம் இவரை மேன்மை யாய் எண்ண ஏதுக்களாயிருந்தன. சுதேச ஊழி யர்களுக்குள் மாத்திரமல்ல, பிறதேச மிஷனரிமா ருக்குள்ளும் இவரைப்பற்றி நன்குமதிப்புண்டு. இவர் பெயர் யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல,

இலங்கை முழுவதிலும், இந்தியாவிலும், ஏனைய வெளிநாடுகளிலும் எட்டியது. 'அமெரிக்கன் போட்' சங்கத்தார், தம்தேச மிஷனரிமாராய் இங்கு அனுப்பியவர்களைப்பற்றி அறிந்ததிலும் பார்க்க இப்போதகரைக்குறித்து கூடிய அறிவும் மதிப்பும் உள்ளவர்களாயிருந்தனர். ஒரு முறை 'போட்' சங்கத்தில் யாழ்ப்பாணத்துக் கனுப்பும் அமெரிக்க மிஷனரிமார் தொகையைக் குறைக்க யோசனை நடந்தபோது, அங்கிருந்த இலங்கை அமெரிக்கன் மிஷனரிமாரில் ஒருவர் இப்போதகரின் பெயரைச் சொல்லி, 'இவர் யாழ்ப்பாணத்திலிருந்து மிஷனரிமாரை எடுக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்ளுகிறார்" எனச் சொன்னபோது அவ்வார்த்தை சங்கத்தில் அங்கீகரிக்கப்பட்டது.

## கிழக்குநாட்டில் அவர்செய்த ஊழியம்

உத்தேசம் 1883-ம் ஆண்டு அமெரிக்காவிலிருந்து இத்தேசத்தில் தேவனுடைய இராச்சியத்தின் ஊழியத்தைச் செய்யவந்த லீச் அம்மாமார் இருவரும் லீச் ஐயருமாகிய மூவரும் சாவகச்சேரிக்கு முதல்முதல் வந்தபோது, கனம் ஹன்ற் போதகர் அம்மூவரையும் ஓரிடத்தில் சந்தித்து " நான் வட்டுக்கோட்டைக் கலாசாலையின் உபாத்தி வேலையைவிட்டு, விசாரிப்பாரற்று உதவிபுரிவாரின்றி இருக்கும் இக்கிழக்குநாட்டில் தேவனு

டைய இராச்சியத்தின் வேலையைச் செய்ய வந்திருக்கிறேன். இத்தேசத்துக்கு நன்மை செய்யவந்திருக்கும் நீங்கள் இந்தக் கிழக்குப்பாகத்தில் என்னசெய்ய விரும்புகிறீர்கள்? கர்த்தர் உங்களை இவ்விடங்களின் ஆசிர்வாதத்துக்காய் எப்படிப் பாவிக்கப் போகிறார் என்பதையும் அறிய விரும்புகிறேன்" என்றார். மிஷனரிமார் போதகருக்குப் பிரதியுத்தரமாக "சிலநாட்களில் அதைச் சொல்லுவோம்" என்றார்கள். உடனே போதகர், அந்த இடத்திலேயே எல்லாரும் முழங்காலில் நிற்கச் செய்து தருணத்துக்கும் விஷயத்துக்குமிணங்க செபித்தார். மிஷனரிமார் போனபின் போதகர் அப்போது பண்டத்தரிப்பில் வேலைசெய்துகொண்டிருந்த கனம் S. இளையதம்பிப் போதகரிடம் போய் இக்காரியத்தைச் சொல்லி இருவரும் செபித்தனர்.

சிலநாட்களின்பின் குறித்த மிஷனரிமார் கனம் ஹன்ற் போதகரைச் சந்தித்து, சாவகச்சேரி மிஷன்வளவுக்குள்ளிருக்கும் சிறிய கட்டிடத்தை அழித்து ஓர் மிஷனரி ஸ்தானத்துக்குரிய பெரிய வீடொன்று போடுவோம். அக்கட்டிடத்தில் பெண்களுக்கு வாரத்தில் சிலநாட்களில் ஒரு பெண் டாக்டரால் வயித்திய சிகிச்சை நடைபெறச் செய்வோம். இப்போதிருக்கும் பாடசாலைகள் தற்போதைய நிலைபரத்திலும் அதிக முன்னேற்றத்துக்குக் கொண்டுவருவோம்" எனச் சிலகாரியங்களைச் சொன்னார்கள். போதகர், "உயிரற்ற

இக்கட்டிடங்களிலும்பார்க்க சீவனுள்ள வித்தாகிய சுவிசேஷத்தை இத்தேசத்துச் சனங்களின் மனங்களில் விதைக்க, நீங்கள் எங்களை உடனூழியராய்க் கொண்டு சுவிசேஷவேலைசெய்ய வேண்டும்” எனக் கேட்டார். அந்தப்படியே மிஷனரிமார் தாம் செய்ய எண்ணிய விஷயங்களையும் செய்து போதகர் கேட்டுக்கொண்டபடி பல வருஷ காலங்களாக கிழக்குநாட்டு சுவிசேஷ வேலையிலும் சாவகச்சேரிச் சபை ஊழியத்திலும் ஈடுபட்டிருந்தனர். இச் சம்பவங்களுக்குப்பின்பே இணுவில் ஆஸ்பத்திரி உற்பத்தி, மானிப்பாய் ஆஸ்பத்திரிவிருத்தி முதலிய காரியங்கள் ஆக்கற்பாடாயின.

## கிழக்குநாட்டு சனசங்கசேவை

மிஷனரிமார் இங்குவந்தகாலத்தில், ஆரம்பத்தில் யாழ்ப்பாணக்குடாநாட்டின் மேற்குப் பாகங்களிலேயே கல்லூரிகளையும், பெரிய பாடசாலைகளையும், ஆஸ்பத்திரிகளையும், தொழிற்சாலைகளையும் ஆலயங்களையும் அமைத்தனர். ஆற்றினால் பிரிக்கப்பட்டு கீழ்ப்பாகமாயிருந்த கிழக்குநாட்டில் மேற்சொல்லப்பட்ட ஒன்றுமில்லாமல் வெறுமையாகவிருந்தது. போதகர் இந்தத் தாட்சியைக் கவனித்து இப்பாகங்களில் உயர்தர பாடசாலைகள் விசேஷ பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், அரசினர் விடுதி ஆஸ்பத்திரி, மிஷன் பெண்களாஸ்பத்திரி இவைகள் அமைக்கப்படவேண்டுமென விரும்பி

ஆவலாய் உழைத்து வந்தார். அவர் பாடுபட்டதின் பலனை தன் கண்ணுற் காணவிட்டாலும் இக்காலத்தில் இவ்விடத்தில் விளங்கும் எல்லா ஸ்தாபனங்களுக்காகவும் ஆசைப்பட்டு விதை விதைத்தவர் இவரே. நாற்பத்தைந்து ஐம்பது வருஷங்களுக்குமுன் போதகர் விதைத்த இந்த விதைகளுக்கு அவருடைய ஊழியஸ்தானத்தில் ஏறக்குறைய எட்டு ஒன்பது வருஷத்துக்குப்பின் வந்த கனம் J. K. சின்னத்தம்பிப் போதகர் அவர்கள் நீர்ப்பாய்ச்ச, தேவன் அதை விளையச்செய்தார்.

போதகரவர்கள் கிழக்குநாட்டில் உண்டாக்க விரும்பிய காரியங்கள் எல்லாம் இப்போ உண்டாயிருக்கின்றன. 1898-ம் ஆண்டில் இணுவிலில் பெண்பாலாருக்கெனக் கட்டப்பட்ட மிஷன் ஆஸ்பத்திரி கிழக்குநாட்டில் கட்டப்படவும் வட்டுக்கோட்டையில் இருக்கும் கல்லூரியை பிள்ளைகளின் சுகநிலைநோக்கியும் கிழக்குநாட்டுப் பிள்ளைகளின் வசதிநிலை நோக்கியும் மருதனுமடத்துக்குக் கொண்டுவரவும் அவர் எடுத்த பிரயாசங்கள் அனுகூலப்படாமற் போனாலும் அவை கிழக்குநாட்டில் அவர் வைத்த கரிசனைக்குச் சாட்சிகளாகும்.

கவனிக்கப்படாத கிழக்குநாடுகளில் உண்டாகும் நன்மையான காரியங்களில் அதிக மகிழ்ச்சியும் சந்தோஷமுமுள்ளவராயிருந்தார். வடபாகப் புகையிரதவீதி திறக்கப்பட்டு முதல்முதல் புகையிரதம் ஓட்டப்படும் திகதி குறிக்கப்பட்டபோது

முதல் தான் யாழ்ப்பாணம் போய்கின்று அப்பாதையைத் திறந்துவைத்த Sir Joseph Ridgeway தேசாதிபதி அவர்களுக்கு தான் எழுதிய “கிறிஸ்துமார்க்க அத்தாட்சிகள்” என்னும் புஸ்தகத்தில்,

To

SIR JOSEPH WEST RIDGEWAY
In grateful appreciation of
his fight for the cause of
The Northern Railway

FROM

REV. T. P. HUNT

என்னும் வார்த்தைகளை மேல்எழுத்தாய் மலாம் எழுத்தில் பதித்து அவருக்குக் கொடுத்து அன்று முதல் ஓடிய வண்டியில்வந்து சாவகச்சேரியில் இறங்கி என்னைநோக்கி, “நான் வடபாகப் புகையிரதவீதியில் முதற்பிரயாணிகளில் ஒருவனாய் முதல்வகுப்பு வண்டியில் வந்தேன்” என்றுசொல்லி அக்காரியத்தில் அதிகம் மகிழ்ச்சியுள்ளவராயிருந்தார்.

## பஞ்சமசாதியாரும் ஆங்கிலம்படிக்க ஏற்பாடுசெய்தல்

ஆங்கிலக்கல்வியும் உத்தியோகப்பதவிகளும் இற்றைக்கு அரை நூற்றாண்டுகளுக்குமுன் உயர்ந்த

சாதியார் என்று பாராட்டப்பட்டவர்களுக்கே சுதந்தரப்பொருட்கள்போல் எண்ணப்பட்டன. சாதிமான்களும் பொருள்நிலை உற்றோருமே அக்காலம் ஆங்கிலப்படிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

உப்பாற்றுக்குக் கிழக்கேயுள்ள கிழக்குநாடு முழுவதற்கும் பொதுவாய் சாவகச்சேரியில் 5-ம் வகுப்புவரைக்கும் கற்பிக்கப்படும் ஓர் ஆங்கில பாடசாலைமட்டும் இருந்தது.

இப்பாடசாலைக்கணித்தாய் பஞ்சமர்சாதியைச் சேர்ந்த குடும்பத்தில் ஒரு விவேகவிருத்தியுள்ள பையனிருந்தான். அக்குடும்பமும் அச்சாதியாருக்குள் திருத்தமும் நாகரீகப்போக்குமுள்ளதாயிருந்தது. அப்பையன் தமிழ்ப்பாடசாலையில் ஆதாரக்கல்விகற்றபின் அவனுக்குப் போதகர் ஆங்கிலபாஷையறிவைக் கொடுககவிரும்பி 1890-ம் ஆண்டுவரையில் அப்பையனைக் குறித்த ஆங்கில பாடசாலையில் சேர்த்தார். இது அக்காலத்தில் ஓர் நவீனமுறையாகவிருந்ததால் ஊருக்குள் பல கிளர்ச்சிகள் உண்டாயின. கூகைக்குஞ்சைக் காகக்கூட்டங்கள் வளைந்து கொத்துவதுபோல் பாடசாலையின் மற்றப் பிள்ளைகளெல்லாரும் இப்பையனுக்கு இம்சைசெய்தனர். இவன் கொண்டு போகும் வழக்கை விளங்குவதே உபாத்திமாருக்குரிய முழுநேர வேலையாகிவிட்டது. சில நாட்களால் ஊர்ச்சனங்கள் போதகரிடம்வந்து, "பள்ளியை மூடப்போகிறாயோ பள்ளனைத் தள்ளப்

போகிறாயோ?" என்று கேட்டனர். போதகர், "உங்கள் பிள்ளைகள் படிப்பதற்கு வேறும் பாடசாலைகள் பலவுண்டு. இவன் படிக்கவேண்டுமானால் இப்பாடசாலைதான் உண்டு. எல்லாப்பிள்ளைகளும் போனாலும் இவன்மாத்திரம் இங்கேபடிக்கட்டும்" என்றார். நாட்கள் செல்லச்செல்ல ஊரவரின் கிளர்ச்சிகளும் மாணவரது தொந்தரவுகளும் அதிகப்பட்டன. போதகர் உறுதியாகவிருந்தாலும் பஞ்சமர்சாதிக் குடும்பம், "எங்கள் ஒரு பையனால் ஊரில் இவ்வளவு கிளர்ச்சியேற்படுகிறதே" என்று சுயவெறுப்புள்ளவர்களாய் ஊரின் சமாதானநிலை கருதித் தங்கள்பையனை மறித்துக்கொண்டனர். இச்செயல் வீணாய்ப்போனதென்று சொல்வோமோ? போதகர் போட்டவிதை முளைத்து பலகாலம் நராங்கியிருந்து இப்பொழுது புதுத் தளிர்கள்விட்டு செழித்து வளர்வதுபோல் அக் குடும்பத்தில் மூன்றாந்தலைமுறையான பேரப் பிள்ளைகள், பாடசாலை முன்னேற்றமடைந்து கல்லூரியானபின்னும் மற்றப்பிள்ளைகளுக்கும் இவர்களுக்குமிடையில் யாதொரு வித்தியாசமுமில்லையென்று சொல்லத்தக்கமுறையில் கல்விகற்று வருவது சந்தோஷமே.

## சாதிக்கட்டையழித்தல்

கல்வியறிவு, நாகரீகப்போக்கு, ஐசுவரியப் பெருக்கு அதிகப்பட்ட இக்காலத்தில் சாதிக்கட்டினிறுக்கம் வரவரத் தளர்ந்துவரக் காண்பது சந்

தோஷமே. இற்றைக்கு 50, 60 வருடங்கட்கு முன் அக்கட்டு இறுக்கமும் முரண்பாடுமாயிருந்தது. வேளாளர் என்று சொல்லப்பட்ட வகுப்புக்குள்ளும் பல உட்பிரிவுகளிருந்தன. இப்பகுப்பினர் தங்களுக்குள் விவாகவொழுங்கு செய்புங் காலத்தில் சாதிக்கதை பேசினுல் போதகரவர்கள், "வெள்ளைத்தாளில் திடல் பள்ளம் பார்த்துக் கொண்டிருக்கிறவன் எழுத்துவேலை செய்யமாட்டான்" என்பார். இவர் எப்போதும் சாதிக் கட்டை அழித்துவந்தார். "விவாகம்பேசும் போது குடிவெறி, பைத்தியம், பரவணித்தொற்று நோய் முதலியவைகளைப் பார்ப்பதேயன்றிச் சாதியைப் பாராதிருங்கள்" என்பார்.

போதகரும் அவர் உடனூழியனுன ஓர் உபதேசிகரும் பஞ்சமர்சாதி வீட்டில் ஒரு விவாகத்துக்குப் போயிருந்தார்கள். பந்திநேரத்தில் போதருடைய தன்மையை அறிந்த உபதேசிகர் சாடையாக விலகிவிட்டார். தலைப்பந்தியிலிருந்து போதகர் சாப்பிட்டார். பந்திமுடிந்தபின், உபதேசிகர் பந்தலில் வந்தபோது, "என்சாதி எவ்வளவு வலுத்தது. நான் பள்ளவீட்டில் சாப்பிட்டாலும் என் சாதி பெலவீனப்படமாட்டாது. உபதேசிகர் சாதி மெத்தப்பெலவீனமானது. அவரின்று இங்கு என்னுடன் சாப்பிட்டிருந்தால் அவர் சாதி முழுவதும் அழிந்துபோம். ஆகையால் அவர் தன் சாதியைக் கொண்டோடி விட்டார்"

என்றார். கிறீஸ்த சபையார் பேதம் பாராட்டாமல் ஒரே பந்தியிலிருந்து சாப்பிடுவதும் கொண்டாடுவதும் போதகருக்கு மெத்தவும் விருப்பம். இந்த முறையில் சாவகச்சேரிச்சபையை அவர் பயிற்றி வந்ததால், மற்றச் சபைகளில் தற்காலமில்லாத சில ஐக்கியக் கட்டுகள் இச்சபையில் இன்றும் உண்டு. சாதியைப் பாராட்டும் கிறிஸ்தவர்கள் இம்முறையில் விருப்பமற்று, இழிமொழியாகவும் பழமொழியாகவும் "சாவகச்சேரி என்றொரு சபையாம், அதில் கலந்து குழைப்பது கன்றுப் போதகர் முறையாம்" என்பர். இக்குறைவு யாரைப் பொறுத்தது? சாவகச்சேரி சபையைப்பொறுத்ததோ அல்லது இப்படி பேசுபவரைப் பொறுத்ததோ?

## பொதுசன ஸ்தாபனங்கள்

போதகர் கையிட்டுத் தொடங்கிய காரியங்களில் யாழ்ப்பாணக் கல்லூரியே காத்திரமான ஒன்று. இதை மேல்நிலைக்குக் கொண்டுவந்தவர் அவரானதால் அக்காலத்துச் சனங்கள் "கன்றுலேயல்லோ கல்லூரியானது" என்று பழமொழி போல் சொல்லிக்கொள்வர். உபாத்தியாயிருந்து கற்றுக்கொடுத்த விஷயத்தில் மாத்திரமல்ல, இலங்கை இந்தியா எங்கும் சென்று ஏராளமான பொருள் சேகரித்துக் கொண்டுவந்து கட்டிட விஷயங்களிலும் மற்றும் பல வேலைவிஷயங்களிலும் அதை உயர்ந்த நிலைக்குக் கொண்டுவந்தார்.

கிறிஸ்துமார்க்க அபிவிருத்திக்கென்றே இது ஸ்தாபிக்கப்பட்டது. ஹென்றுப்போதகரும் ஸ்ரீமான் சாமுவேல் ஹென்ஸ்மன் அவர்களும் இக்கல்லூரிக்குப் பணஞ்சேர்க்கும் முறையில் கல்லூரியின் தேவை நோக்கங்களைக் காட்டி பம்பாய்த் தேசாதிபதிக்குச் செய்த ஒரு மனுவின் பிரதி சிலநாட்களுக்குமுன் சாவகச்சேரியில் தோற்றி மறைந்துபோனது. அது கிடைத்தால் அக்கல்லூரியைக் குறித்து ஆதியில் கொண்ட நோக்கம் அறியப்படும் என்று எண்ணினேன். அது கிட்டாதது துக்கம். தேசாதிபதி ஆயிரம் ரூபாய் கொடுத்துதவினர். போதகர் கொழும்புக்குச்சென்று யாழ்ப்பாணத்தில் ஓர் கல்லூரியின் தேவை, அதன் நோக்கங்கள், அதால் வரக்கூடிய நன்மைகள் முதலியவைகளைக் குறித்து அங்குள்ள திரு. சொய்ஸா அவர்களுடன் பேசியபோது அவர் மனமுவந்து ஆயிரம்ரூபாய் கொடுத்ததோடு, போதகர், கல்லூரியின் நோக்கம் நன்மைகளை விஸ்தரித்துப் பேசியவேளையில் இப்படியான ஒரு கல்லூரி எங்கள் தேசத்திலும் இருப்பது நல்லது என்றெண்ணி திரு. சொய்ஸா அவர்கள், "Prince of Wales College" ஐ ஸ்தாபிக்களத்தனப்பட்டார். 'சத்தமும் தொனித்து எதிரொலியும் புறப்பட்டதுபோல' இது இருந்தது. இக்காலம் யாழ்ப்பாணக் கல்லூரியை ஆக்கினவர்களும் மறக்கப்பட்டு நோக்கங்களும் தவறிப்போனதுபோற் காணப்படுவது துக்கத்துக்கிடமானது.

## வியாபார சமுதாயம்

மனுஷருக்குள்ளே தொழில், ஐக்கியம், நம்பிக்கை, ஆதாயம் முதலிய விஷயங்கள் நோக்கி போதகர் இச்சங்கத்தை 1861-ம் ஆண்டு ஏற்படுத்தினர். தான் பெற்ற மகனுக்கு உணவின் முறையை ஏற்படுத்தும் பிதாவைப்போல் இச்சங்கத்தை யாழ்ப்பாணக் கல்லூரியின் தாபரிப்புக்குரிய பொருளாதாரமுறையில் தொடங்கி அதன் ஆதாயத்தில் பத்திலொன்று யாழ்ப்பாணக் கல்லூரிக்குச் சேரவும், கல்லூரிக்குப் பங்குவீதங்கள் ஏற்படவும் ஒழுங்குசெய்தார். கல்லூரிக்கும் வியாபாரசங்கத்துக்குமிடையில் உள்ள ஐக்கியமுறையினல் யாழ்ப்பாணக் கல்லூரியின் தலைவர்களே அனேககாலமாய் வியாபாரசங்கத்தின் காரியஸ்தர் கூட்டத்தின் தலைவர்களாயிருந்தார்கள்.

## கிறீஸ்த சம்ரட்சணசங்கம்

யாழ்ப்பாணக் கிறீஸ்த சாகியத்தில் ஒருவர் மரிக்கும்போது அவரால் ஆதரவுபெற்றவர்கள் வருந்தாமல் பணவுதவிபெற்றுத் தாபரிக்கப்படும் முறையில் அவரும் ஒருவராய் நின்று 1892-ம் வருஷம் இச்சங்கம் ஏற்பட உழைத்தார்.

## யாழ்ப்பாண சுதேச சுவிசேஷ சங்கம்

இற்றைக்கு தொண்ணூற்றுமூன்று வயசு பெற்ற இச்சங்கம் சுதேசிகள்பொறுப்பில் வந்த

போது யாழ்ப்பாண அமெரிக்கன்மிஷன் சபைகள் தீவுப்பற்றில் நடக்கும் சுவிசேஷ வேலைக்குரிய சங்கத்தின் லிகிதராய் வெகுகாலமிருந்து கடமை பார்த்தார்.

## மதுவிலக்கு ஊழியம்

மதுபானத்துக்கு சீவியகாலமெல்லாம் விரோதியாகவிருந்து பிரசங்கஞ்செய்தும் துண்டுப்பிரதிகள் பரப்பியும் அதை நீக்குமுறையில் ஊரவர்களிடம் கையெழுத்துவாங்கி அரசாட்சியாருக்கு மனுச் செய்தும் உழைத்தார். ஒரு மதுவிலக்குச்சங்கக் கூட்டத்தில், ஓர் ஆகாய வாணத்தையும் சாராயத்தில் போடப்பட்ட ஒரு புழுவின் உடலையும் கொண்டுவந்து காட்டி மதுபானம் ஊக்கத்தைத் தரும் ஒன்றல்ல, அதற்கு அத்தாட்சியாக இந்த வாணத்தைப்பாருங்கள், மருந்து முடிந்தவுடன் தலைகீழாக விழும். சாராயம் போசனத்தைசெமிக்கப்பண்ணு மொன்றல்ல. அதற்கு அத்தாட்சி இந்தப் பூச்சியின் உடல் அழியாமலிருப்பதைப் பாருங்கள்" என்றார். தேகத்துக்கு ஊக்கமும் சுகமுங்கொடுக்குமுறையில் குடிவகையை மருந்தாய்ப் பாவிக்கிறோம் என்ற எண்ணமுடையோருக்கு அது நன்மையை அல்ல நஷ்டத்தையே செய்வதாய்ப் பலவழியாயும் போதிப்பார்.

குடிவகை எப்போதும் நஞ்சேயல்லாமல் ஒருபோதும் மருந்தல்லவென்பது அவர் கொள்கை. அவருடையவியாதிப்படுக்கையில் பிரிவுசமீபிக்கும்

நேரம் வைத்தியரின் சிபாரிசின்படி "சம்பே யின்" என்னும் மஸ்துபதார்த்தத்தில் கொஞ்சங் குடிக்கக்கொடுத்தார்கள். அவ்வேளையில், ஆண்டவர் சிலுவைப்பாடுகளின் மத்தியில் காடிகுடிக்கக் கொடுக்கப்பட்டபோது அதை ஏற்றுக்கொள்ளாமல் வெறுத்துத் தள்ளிய தன்மைபோல் தள்ளி விட்டார்.

பகிரங்கமான இவ்வகைக் குடிவகைகள் மாத்திரமல்ல, கிறிஸ்தசீவியத்தின் அழகைக்குறைத்து நேரத்தைக் கொள்ளைகொள்ளும் புகையிலை வெற்றிலை முதலியவைகளும் அவருக்கு வெறுப்பே. இது சம்பந்தமாய் அவர் ஒருமுறை "சாப்பிட்ட பின் புகையிலையைச் சுருட்டாக்குவதிலும் தீமூட்டுவதிலும் புகைப்பதிலும் சில நிமிஷங்களை மனிதர் கழிக்கும் அந்தநேரம், நான் ஓர் புஸ்தகத்தை வாசித்து அல்லது ஓர் காகிதத்தை எழுதி அல்லது ஒருவருடன் நல்வாக்குப் பேசி அந்த நேரத்தைப் பலன்படுத்திக்கொள்கிறேன்" என்றார்.

தற்காலம் புகையிலை, வெற்றிலை பாவித்தல், படக்காட்சி, நடனவிழா முதலிய காரியங்கள் பாவமா என்று பலவேளை கேள்விகள் உண்டாகின்றன. இவைகள் பாவமாவென்று கேட்கிறார்களேயல்லாமல் இவைகள் பரிசுத்தமா என்று ஒருவரும் கேட்பதில்லை.

எப்படியும் ஊழியர்களுக்கு இவை ஒவ்வாக் காரியங்களே. ஊழியர் எல்லாவிஷயத்திலும்

மனிதருக்கு மாதிரி காட்டவேண்டியவர்கள். ஆகையால் மற்றவர்கள் அற்பமாய் எண்ணும் சிறிய காரியங்களிலும் கவனமாகவே இருக்க வேண்டும். நமது ஆண்டவர் தாம் சம்பந்தப்படும் விஷயங்களில் தம்மளவில் பாவமற்றிருந்தாலும் மற்றவர்களின் பரிசுத்தம்நோக்கி அவைகளை விலக்கினார். "அவர்களும் சத்தியத்தினாலே பரிசுத்தமாக்கப்படும்படி அவர்களுக்காக என்னைத் தானே பரிசுத்தமாக்குகிறேன்"(யோவான் 17:19) என்றார்.

பலவருஷங்களுக்குமுன் நான் ஓர் மாணவனாயிருந்தபோது குருத்துவத்துடன் ஆசிரித்துவம் பூண்டு நம்மைப் படிப்பிக்கவந்த ஓர் உபாத்தியாயர் தமக்குத் தேவையாயிருந்தும் மற்றவர்களுக்கு இடறலில்லாமல் அறைவீட்டில் கதவையும்பூட்டிக் கொண்டிருந்து சுருட்டைப் பாவித்து வாயைக் கழுவி வெளியே வருவார். தற்காலம் புகையிலை வெற்றிலை பாவிக்காத மனிதரைக் காண்பது அரிது. ஊழியர்களிலும் அப்படியே. கண்டாலும் அவர்கள், "நிருவாணப் பட்டினத்தில் வஸ்திரந்தரித்தவன் வேடிக்கைப் பொருளாய் இருப்பதுபோல" காணப்படுகிறார்கள். அது எல்லாருக்கும் பொதுவாய் வந்தபடியால் ஊழியர் நிலைக்கு அது அயோக்கியமென்ற உணர்வுங்கூட இல்லாமற் போய்விட்டது.

## தொடர்ந்தேர்ச்சி

போதகர், தாம் எடுத்துக்கொண்ட எந்த முயற்சியிலும் தொடர்ந்தேர்ச்சியாகவிருப்பார். இடையறுமற் செய்யும் வேலையே பயன்கொடுக்கும் ஊழியம் என்பார். ஒருநாள், ஓய்வுநாட் பள்ளிக்கூட உபாத்திமாருக்கு ஊழியத்தில் தொடர்ந்தேர்ச்சியாயிருக்கும் முறையைக் காட்டும்படி துலாமிதித்துத் தண்ணீரிறைப்பவனின் உதாரணத்தைச் சொன்னார். எவ்வளவுநேரம் பாயவேணுமோ அவ்வளவுநேரமும் இறைக்கவேண்டும். ஆரம்பத்தில் சிலபட்டை இறைத்துச் சில நிமிஷம் ஓய்ந்து அப்புறம் சிலபட்டை இறைத்து திரும்ப ஓயும்முறையில் இறைத்தால் தண்ணீர் வாய்க்காலில் வற்றிக்கொண்டு நிற்பதேயல்லாமல் பாயமாட்டாது என்று போதித்தார். இந்தவிதமாய்த் தான் சொன்னபடியே எல்லா ஊழியங்களையும் முயற்சியோடும் தொடர்ந்தேர்ச்சியோடும் செய்துவந்தார்.

## மரணத்துக்குரிய ஆயத்தம்

நித்தியத்தின் நிச்சயமும் உலகவாழ்க்கையின் நிலையற்ற தன்மையும் அவருள்ளத்தில் எப்போதும் இருந்தன. அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் விசேஷித்த சுவிசேஷவேலை செய்த மூடி பிரசங்கியார் தன் அந்திய காலத்தில், " உலகம் எனக்குத் தூரப்படுகிறது. நித்தியம் எனக்குக்

கிட்டிவருகிறது, என் தேவன் என்னை அழைக்கிறார்" எனக்கூறிய வாக்குகள் போதகரின் உள்ளத்தில் எப்போதும்தொனித்துக்கொண்டிருந்தது. அதை அவர் திரும்பத் திரும்பச் சொல்லிவருவார். அவர் செய்யும் ஒவ்வொருசெபத்தின் கடைசியிலும் "உம்முடைய ஆலோசனையின்படி என்னை நடத்தி ஈற்றிலே உம்முடைய வீட்டில் சேர்த்துக் கொள்ளும்" என்பார்.

ஒருமுறை வியாதிப்படுக்கையிலிருந்து சுகப்பட்டு எங்கள் வீட்டுக்கு வந்தார். வந்தவுடன், "எனக்கு முதல்மணி அடித்துவிட்டது, போகிறதற்கு ஆயத்தஞ்செய்கிறேன். இரண்டாம்மணியைக் காத்துக்கொண்டிருக்கிறேன். அடித்தவுடன் போய்விடுவேன்" என்றார்.

ஒருவருஷத்தின்பின் திரும்பவும் வருத்தம் வந்தது. வருத்தப்படுக்கையில் பக்கத்திலே போயிருந்தேன். அப்போது அவர், "அமெரிக்காவில் ஓர் பேர்போன வைத்தியர் வைத்திய முறையில் நோயாளிக்கு இயற்கையானது மரணத்தை அல்லது சுகத்தைக் கொடுக்கும் வரைக்கும் வைத்தியர்களும் மருந்துகளும் நோயாளியையும் பார்வைக்காரரையும் தாக்காட்டும் விஷயம் என்று எழுதியிருக்கிறார்" என்றார். அவர் குறித்த வைத்தியரின் வெளிபாட்டை நம்பினாரோ அல்லவோ தெரியாது. ஆனால் வைத்திய சிகிச்சை பெற்று வந்தார்.

## தேகவியோகம்

வருத்தம் படிப்படியாகக்கூடி அறிவுமயங்கும் பரியந்தம் சமாதானத்துக்கும், அன்புக்கும், பக்திவிருத்திக்குமுரிய வார்த்தைகளைப் பேசினார். அனேக வருஷங்களாய் இவரில் திருப்தியீனமாயிருந்த ஓர் உடனூழியன் வருத்தப்படுக்கையில் அவரைப் பார்க்கவந்தபோது, "நாம் ஒருவருக்கொருவர் மன்னிக்கவேண்டும்" என்றார். நோய் சன்னி ரோகமானதால் கடைசிப்பாகத்தில் அறிவு மயங்கினது. மயங்கியும் ஊடேஊடே தனி வார்த்தைகளை மார்க்கமுறையில் உச்சரித்துக்கொண்டிருந்தார். அதிலொன்று, "தேவாவியானவர் கொடுக்கப்பட்டு வருகிறார்" என்பது. 1903-ம்ஆண்டு சித்திரை மாதம் 23-ம்திகதி தன் பூலோக சீவியஓட்டத்தை முடித்தார்.

## அடக்க ஆராதனை

அடுத்தநாட்சாயந்தரம் 4 மணிபோல் அடக்க ஆராதனை நடந்தது. அவர் வீடுதொடங்கிச் சேமகாலை வரைக்கும் உள்ளவீதி முழுவதும் சனத்திரளால் நிரம்பியிருந்தது. இக்காட்சி அவருக்கு சனசங்கத்திலிருந்த செல்வாக்குக்கு அத்தாட்சியாகவிருந்தது. வீட்டில் பலரும் அவர் குணவிசேஷங்களைப்பற்றிப் பேசினர். சேம காலையில் சில வருஷங்களின்பின் யாழ்ப்பாணக் கல்லூரிக்குத் தலைவராய்வந்து பலவருஷங்களாய் வேலைசெய்து

சீவித்துப்போன Rev. John Bicknel, "இந்தக் கிழக்குநாட்டுக்கு வனாந்தரத்தின் நடுவிலிருக்கும் செழிப்பான வெளி (Oasis) போல் இருந்தார்" என்று அந்த முறையில் அவர் சீவியத்தைப்பற்றிப் பேசினார்.

## ஞாபக ஆராதனை

அவர் மரணத்தை அடுத்துவந்த ஞாயிற்றுக் கிழமை காலமே அவருடைய ஞாபக ஆராதனை சாவகச்சேரி ஆலயத்தில் நடந்தது. கனம் S. இளையதம்பிப் போதகர் "நேர்மையாய் நடந்தவர்கள் சமாதானத்துக்குள் பிரவேசித்து தங்கள் படுக்கைகளில் இளைப்பாறுகிறார்கள்" (ஏசா. 57:2) என்னும் வாக்கியத்தை ஆதாரமாகக்கொண்டு ஓர் பிரசங்கஞ்செய்தார்.

## முடிவுரை

ஆகாயத்தில் காலந்தோறும் தோற்றி மறைந்துபோகும் தூமகேதுக்களைப்போல் பூமியில் காலங்கள்தோறும் தேசங்கள்தோறும் பல பெரியார் தோன்றி மறைகின்றனர். அப்படித் தோன்றிய மக்களில் போதகரும் ஒருவர் என்பது நிச்சயம். அவரில் நான்கண்ட மேன்மையான குணசீலங்களை அவரை முகமுகமாய்க் காணாதவர்களும் அறியாதவர்களுமான பலரும் அறியும்படி நானும் எனது சீவியஓட்டத்தை முடிக்கமுன் செய்யவேண்டிய கடமைகளில் ஒன்று என்

றெண்ணி இதை வெளியிட்டேன். ஆயினும், அவரில் விளங்கிய சகல குணசீலங்களையும் வேலைத் திறமைகளையும் இச்சிறு புஸ்தகத்தில் காட்டி முடித்தேன் என்று சொல்லமுடியாது. இவைகள் அவர் இராச்சியத்து ஊழியர்களுக்கு மாதிரியையும் சாதாரண கிறிஸ்தவர்களுக்குப் போதனையையும் இதர சமயிகளுக்கு நல்லுணர்வையுங் கொடுக்கும் என நம்புகிறேன். பிரயாசத்துடனும் பொருட்செலவுடனும் செய்யப்பட்ட இந்த ஊழியத்தைக் கடவுள் அனேகரின் சீவியத்துக்குப் பலனுள்ள ஒன்றாக்க வேண்டுமென்னும் பிரார்த்தனையோடு முடிக்கிறேன்.

முற்றிற்று

THEV
PRIEST